பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 03 | 06 ஒக்ரோபர் 2018 | விதி : 121



சதியால் வீழ்த்தப்பட்ட வேங்கைகள்



கலைந்து போகும் நாயகக் கனவுகள்



குருவாக வேண்டும் ஆசிரியர்கள்




“உன் உடல் உன்னுடையது மட்டுமே”




‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!’




பெரிய வாய்ப்புகளை மட்டுமே குறி வைத்து வருகிறார் கீர்த்தி சுரேஷ். இந்நிலையில் ஜூனியர் என்.டி.ஆர்., ராம்சரண் ஆகியோரை ராஜமௌலி இயக்குகிறார்.

இந்தப் படத்தில் கீர்த்திசுரேஷ் முக்கியமான பாத்திரத்தில் நடிக்கிறார். இது தனக்கு இன்னும் பெரிய இடத்தைத் தரும் என்று எதிர்பார்க்கிறார்.

ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் 'சர்கார்' படத்தின் 'ஒரு விரல் புரட்சியே...' பாடல் செப்.30 ஆம் நாள் வெளியானது.

பாடல் வெளியான 20 மணி நேரத்தில் 32 இலட்சம் பார்வைகளையும் இரு நாட்களில் 51 இலட்சம் பார்வைகளையும் கடந்துள்ளது.



மலையாளத்தில் பிரியதர்ஷன் இயக்கும் 'மரக்கார்: அரபிக்கடலிண்டே சிம்ஹம்' படத்தில் மோகன்லாலும் அவர் மகன் ப்ரணவ் மோகன்லாலும் நடிக்கின்றனர்.

நாயகிகளாக கீர்த்தி சுரேஷ், கல்யாணி பிரியதர்ஷன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.



விஷாலின் 'தீராத விளையாட்டுப் பிள்ளை' படம் மூலம் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமானவர் தனுஸ்ரீ தத்தா.

நானா படேகர் மீது பாலியல் குற்றச்சாட்டு வைத்தவர் இப்போது விவேக் அக்னிஹோத்ரி ஆடை இன்றி ஆடுமாறு கட்டாயப்படுத்தினார் என்று சாடியுள்ளார்.

இதன்போது, இர்பான் கான், சுனில் ஷெட்டி ஆகியோர் தனக்கு ஆதரவாக இருந்தனர் எனக் கூறியுள்ளார். இவரது சாடல்கள் பொலிவுட்டில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

'யு ரேர்ன்' படத்தைத் தொடர்ந்து நாகசைதன்யாவுடன் 'மஜிலி' என்ற படத்தில் நடிக்கிறார் சமந்தா.

அடுத்து, நந்தி ரெட்டி என்ற பெண் இயக்குநரி கதைக்கு ஓகே சொல்லி விட்டாராம்.

இதனால் சமந்தாவின் புதிய பட அறிவிப்பு விரைவில் வெளியாகும்.





புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 06 ஒக்ரோபர் 2018 விதி : 121

# ரணில் இருக்கும் திசையை மஹிந்த வணங்க வேண்டும்



ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்ததும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருக்கும் திசையைப் பார்த்து வணக்கம் செலுத்த வேண்டுமென நீதியமைச்சர் தலதா அத்துக்கோரல தெரிவித்துள்ளார்.

போர் குற்றங்களை விசாரிக்கும் அதிகாரத்தை சர்வதேச நீதிமன்றங்களுக்கு வழங்கும் 'ரோம் பிரகடனத்தில்" பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட மறுத்துவிட்டார். அதன் காரணமாக இலங்கையில் இடம்பெற்ற போர் குற்றங்கள் மனித குல விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சர்வதேச நீதிமன்றம் விசாரணை நடத்தவோ தண்டனை வழங்கவோ முடியாது.

தன்னை மின்சாரக் கதிரையில் ஏற்றி மரண தண்டனை வழங்கத் திட்டமிடப்படுகிறதென மஹிந்த ஒப்பாரி வைத்தது நினைவிருக்கலாம். சர்வதேச நீதிமன்றம் மரண தண்டனை விதிப்பதில்லை என்பதும் இலங்கை விவகாரங்களை விசாரிக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

எப்படியிருப்பினும் ரோம் பிரகடனத்தில் கையெழுத்திட மறுத்ததன் மூலம் மஹிந்தவை மட்டுமல்ல கோத்தபாய உட்பட சகல போர் குற்றவாளிகளையும் காப்பாற்றிய மைக்காக அவர்கள் அனைவருமே ரணிலை வணங்க வேண்டும்.

அதேவேளையில் தங்களை விடுதலை செய்யக் கோரி உண்ணாவிரதப் போராட்டம் நடத்தும் கைதிகளின் விடுதலை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பிரதமர், நீதியரசர், சட்டமா அதிபர் ஆகியோருடன் பேச்சு நடத்தியபோது 5 பேரை மட்டுமே விடுவிக்க முடியும் எனவும் ஏனையோரை விடுவிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயத்தில் சுமந்திரனை அவர்கள் இவர்கள் இருக்கும் பக்கமா அல்லது எதிர்த்திசையிலா வணங்க வேண்டும் என்பது பற்றி தலதா அத்துக்கோரல எதுவும் தெரிவிக்கவில்லை.

**கும்பிட்டு வாழ்வதும் கும்பிட வைப்பதும்**
**அம்பிட்ட பக்கம் அடிவருடும் கேவலம்**

# இன அடையாளங்களை அழிக்க சட்டபூர்வ முயற்சி



எதிர்காலத்தில் பிறப்புச் சான்றிதழ்களில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என இன அடையாளங்கள் குறிப்பிடுவதை தவிர்த்து எல்லோரையும் ஒட்டுமொத்தமாக இலங்கையர் எனப் பதியப்பட வேண்டும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.


இதுகாலவரை பிறப்புச் சான்றிதழ்களில் இலங்கை சிங்களவர், இலங்கைத் தமிழர், இலங்கை முஸ்லிம்கள் என்றே பதியப்பட்டு வந்தது. உள்நாட்டமைச்சர் இந்த இன அடையாளங்களைப் பதிவு செய்வதைத் தவிர்ப்பதன் மூலம் சட்டபூர்வமாக இனங்களுக்குரிய தனித்துவத்தை இல்லாமல் செய்ய முனைகிறார். இதுவும்கூட இன அழிப்பின் இன்னொரு வடிவம்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு இனத்துக்கும் தனித்துவமான மொழி, கலாசாரம் வரையறுக்கப்பட்ட வாழ்விடம், பொதுப் பொருளாதாரம் என்பன உண்டு. ஆனால் இன அடையாளங்கள் சட்டப்படி அகற்றப்படும்போது தேசிய இனங்கள் தனித்துவம் சிதைவடைவது தவிர்க்க முடியாது.

இதன் பலன் காலப்போக்கில் சிறுபான்மை இனங்கள் பெரும்பான்மை இனத்துக்குள் கரைந்து போகும் அபாயம் உண்டு. எனவே தமிழ், முஸ்லிம் மக்கள் சீனி பூசிய துப்பாக்கிக் குண்டுகள் பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

**தவறுக்கு வருந்துகிறோம்**

முகப்புப் பக்கத்தில் **ஆசிரியர் தின வாழ்த்துக்கள்** என்ற சொல் தவறுதலாக ஆசியர் தின வாழ்த்துக்கள் என பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்



# கோத்தபாயவின் பாதுகாப்புக்கு நாளொன்றுக்கு 35 லட்சம் ரூபா

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக சிறப்பு அதிரடிப் படையினர் உட்பட 70 பொலிஸார் அமர்த்தப்பட்டுள்ளனர் என்றும் இதற்கான செலவினம் ஒரு நாளைக்கு 35 இலட்சம் ரூபா எனவும் பிரதி சட்டம் ஒழுங்கு அமைச்சர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையுயர்வு, போக்குவரத்து கட்டணங்களை உயர்வு, மா, சீனி, சமையல் எரிவாயு உட்பட பாவனைப் பொருட்களின் விலையுயர்வு என்பன காரணமாக மக்கள் வரிச் சுமை தாங்க முடியாமல் திணறி வருகின்றனர். இப்படி இரக்கமற்ற முறையில் மக்களின் கழுத்தை நெரித்துப் பெறப்படும் வரிப்பணத்தில் ஒரு தனிநபரின் பாதுகாப்புக்கு ஒரு நாளுக்கு 35 இலட்சம் ரூபா செலவிடப்படுகின்றது.

ஆனால் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் சம்பளத்தை ஒரு நாளுக்கு 1000 ரூபாவாக வழங்கும்படி கேட்கும்போது பிடிவாதமாக மறுக்கப்படுகின்றது. 50 ரூபாவால் அதிகரிக்கச் சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது. இத்தனைக்கும் கோத்தபாய ஒரு முன்னாள் அரச அதிகாரி. தற்சமயம் இவர் அரச அதிகாரியோ, ஒரு அமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினரோ அல்ல. அதுமட்டுமின்றி அவன்காட் ஊழல் விவகாரத்தில் 110 கோடியுடன் சம்பந்தப்பட்டது உட்பட இவரின் மீது ஊழல் மோசடி வழக்குகள் உண்டு.

இப்படியான ஒருவருக்கு நல்லாட்சி அரசாங்கத்தில் மக்கள் வரிப்பணத்தில் ஒரு நாளுக்கு 35 இலட்சம் செலவிடப்படுகின்றது.

**வல்லவன் பம்பரம் வரம்பிலும் ஆடும்**
**மணலிலும் ஆடும் - நியாயங்கள் சாகும்**


# கடந்தவார சமூக வலைத்தளங்களில்























புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## சுமந்திரனே வாருங்கள்...! முதலமைச்சர் வேட்பாளராக!!

அடுத்து நடக்கவுள்ள வட மாகாண சபைத் தேர்தல் தமிழர் அரசியலில் மிக முக்கியமான - திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கலாம். தேர்தலுக்கு இன்னமும் நாள் குறிக்கப்படவில்லை. ஆனால் தேர்தல் களம் இப்போதே சூடுபிடிக்கத் தொடங்கி விட்டது.

சுமந்திரன் - விக்னேஸ்வரன் முரண் போர் இனியும் தணியும் என்று நம்புவது இயலாத காரியம். இதனை அவர்களின் வாய் வழி வந்த வார்த்தைகளே வெளிப்படுத்தி நிற்கின்றன. 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் இல்லை. புதியவர் களமிறங்குவார்" என சுமந்திரன் எம்.பியும், 'புதிய கட்சியில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவேன்" என முதலமைச்சர் விக்னேஸ்வரனும் கருத்துக்களை வெளியிட்டிருந்தனர்.

நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை அரசியலுக்கு அழைத்து வந்ததில் அதிக பங்கு சுமந்திரன் எம்.பிக்கு உண்டு. தேர்தலுக்கு முன்பு வடக்கு மக்களுக்கு விக்னேஸ்வரன் அவ்வளவு பரிச்சயமானவர் இல்லை. ஆனால் அவரை அறிந்தவர்கள் அவர் மீது பெரும் மதிப்பும் - நம்பிக்கையும் வைத்திருந்தனர். நாளடைவில் மக்கள் மத்தியில் அவர் மீதான நம்பிக்கையம் மதிப்பும் உயர்ந்தது. இன்றிருக்கும் தமிழ் அரசியல் தலைவர் எவரையும் விட அவருக்கான மக்கள் சக்தி அதிகம் என்பதை அவரின் செயற்பாடுகள் உணர்த்தின.

எதையும் நேரடியாகப் பேசும் - கேட்கும் குணம் படைத்தவர் முதலமைச்சர். இனப்பிரச்சினை விடயத்தில் சற்றும் விட்டுக் கொடுப்புக்கு இடமில்லாத போக்குக் கொண்டவர். அதிகாரத்தை அல்லது அபிவிருத்தி விடயத்தை மத்தியிடம் இரந்து கேட்கும் குணம் இல்லாதவர். இத்தகைய ஒருவரை முதலமைச்சர் நாற்காலியில் இருந்து அகற்ற திரைமறைவில் தலைமை தாங்கி நாடகங்களை அரங்கேற்றினார் சுமந்திரன். முடிவில் சீ.வீ.கே. சிவஞானத்தை பலிக்கடா ஆக்கித் தப்பித்துக் கொண்டார்.

முதலமைச்சர் நாற்காலியில் அமர விக்னேஸ்வரனுக்குத் தகுதியில்லை எனப் பகிரங்கமாகவே சாடி வரும் சுமந்திரன். அவரை அகற்றி விட்டு மாவை சேனாதிராஜாவே முதலமைச்சர் வேட்பாளர், புதியவர் ஒருவரை முதலமைச்சர் பதவிக்கு நிறுத்துவோம் என்றும் அறிக்கை விட்டு வருகிறார். அவரின் அரசியல் சடுகுடுவுக்கு மாவை சேனாதிராஜாவையோ அல்லது புதியவர் ஒருவரையோ பலிக்கடா ஆக்காமல் தானே போட்டியிடுவதே பொருத்தமாக இருக்கும். அவரின் இந்த முடிவை கூட்டமைப்பில் எவரும் எதிர்க்கப் போவதுமில்லை.

நடக்கவுள்ள வட மாகாண சபைத் தேர்தலின் முதலமைச்சர் வேட்பாளராக தானே போட்டியிடுவேன் என ஈ.பி.டி.பியின் டக்ளஸ் தேவானந்தா கூறியிருக்கிறார்.

புதிய கட்சி ஒன்றில் சி.வி.விக்னேஸ்வரன் போட்டியிடும் சூழல் ஏற்பட்டால் அவருக்கு சவால் விடுக்கும் சுமந்திரனே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராகத் தகுதியுடையவர்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 21

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

உணவுப் பொருள் யாரிடம் உள்ளதோ அவனே உலகிற் மிகுந்த பணக்காரன் என்பதை இரட்டைவாய்க்கால் ஒற்றைப்பனையடி அறிவித்து நின்றது. இரவுணவை அந்தப் பெண்ணே செய்தார். எனக்கு ஓய்வு தேவையாக இருந்தது. இடுப்புப் பகுதியும் முள்ளந்தண்டும் வித்தியாசமான முறையில் செயலிழப்பது போல் சோர்வடைந்திருந்தேன். அவர்கள் பதுங்குகுழியை பெரிய அறை வடிவில் கிண்டி வைத்திருந்தார்கள். மேலே எந்தவித காப்புகளுமில்லை. அது பயங்கரமான முட்டாள்தனமான பாதுகாப்பு அகழி என்பதை நான் அறிவேன். அதனால் மாலைப் பொழுது முழுதும் எம்மிடம் கிடந்த சாறிகளை கிழித்து மண்மூடை பைகளாக தைத்து மண்மூடைகளால் மேலே காட்டுத் தடிகள் சிலவற்றைப் போட்டு காப்பிட்டோம். இரவு முழுதும் ஓயாத நெருப்படியாக குண்டுகள் மாறி மாறி சீறி வெடித்து அச்சத்தைத் தந்தன. அந்தக் குடும்பத்தின் தலைவர் மிகவும் பயந்த சுபாவம் உடையவர். அவரது வியூகங்களும் ஊகங்களும் வீண் அச்சத்தை எமக்கும் ஏற்படுத்தி எரிச்சலைத் தந்தது. இப்படியே இருந்து ஆமிக்கட்டுப்பாட்டுக்குள் போகப் போவதாக சொல்லிக் கொண்டிருந்தார். நீண்ட காலமாக ஆமியைக் கண்டு ஆமிக்கட்டுப் பாட்டுக்குள் வாழாதவர்களே வன்னிமக்கள். ஆமி என்ற சொல்லே எதிரித்தனத்தையே ஏற்படுத்தியிருந்தது. அதனாலேயே மக்கள் ஓடிக்கொண்டே இருந்ததற்கும் இன்னொரு காரணமாக அமைந்தது. அந்தக் குடும்பத் தலைவனின் கூத்தையும் அண்டப்புளுகு ஆகாசப்புளுகை சகிக்கும் மனநிலையும் எனக்கில்லை. தெரிந்த விடயத்தை தெரிவித்தால் கேட்கும் மனநிலை யாழ்ப்பாண ஆண்களிடம் குறைவு என்பதை அந்த மனிதனும் உணர்த்தினான். " இந்தாளுக்கு ஒன்றும் தெரியாது. விசயம் தெரிந்தவர்கள் சொன்னாலும் கேட்காது" என ஒரு முழக்கம் மனைவி முழங்கினாள். பெட்டிப் பாம்பாக மனிசன் அடங்கியது ஆச்சரியமே. இரவுறக்கம் இல்லாத குண்டுச் சவாரி நடக்குமிடமாக இரட்டை வாய்க்கால் அதிர்ந்தது. கடற்கரைப் பக்கமாக வியூகம் மாறியது. விடுப்புப் பார்த்தோம். இறப்போமா தப்புவோமா இருக்கும் நிமிடப் பொழுதில் இருப்பதை ரசிப்போமே என்ற மனநிலை கொண்ட எனது கலாய்த்தல் அங்கு அரங்கேறியது. பயந்திருந்த குழந்தைகள் பக்கத்தில் வந்திருந்து மத்தாப்பு போல வித்தைகாட்டி வெடித்துச் சிதறும் குண்டுகளின் ஒளித் தெறிப்பை வியந்து வியந்து கரத்தை தட்டி மகிழ்ந்து மகிழ்ச்சி கொண்ட மனதோடு மலர்ந்துறங்கினர்.

குழந்தைகள் உலகை மறந்து உறங்கினார்கள். குழந்தைகளாகவே இருந்தால் எவ்வளவு நல்லது என மனம் எண்ணிக் கொண்டது. அவர்களும் நிறையவே களைத்திருந்தார்கள்.

வெடியோசை கேட்டு விழுவதும் எழுவதும் ஓடுவதும் 'ஐயோ... அநியாயம்..." என கூக்குரலிடுவதும் ஓடியவர்கள் இரத்த வெள்ளத்திலே மிதந்து தத்தளித்ததும் குழந்தைகளுக்குப் பயத்தை - மன அழுத்தத்தை ஏற்படுத்தி இருந்தது. எப்போதும் கைவிடாது பற்றிப் பிடிக்கும் இறுக்கத்தில் அவர்களின் உணர்வுகளை அறிய முடிந்தது.

சிலவேளை பெரியவர்களின் அழுகையைப் பார்த்தும் அழுதார்கள். ஏதோ நடக்கக் கூடாத விடயங்கள் நடப்பதாக அவர்கள் நினைக்காமலில்லை. சில வேளைகளில் பஸ் ஏறி 'யாழ்ப்பாணம் போவம் வாங்கம்மா..." என எனது நான்கு வயது மகன் கேட்ட போதெல்லாம் மறுமொழி சொல்ல முடியாது தவித்திருக்கிறேன். அவன் தம்பி பற்றி அடிக்கடி கேட்டான். அவனைக் கேட்கும் போதெல்லாம் நானும் குளறி அழத் தொடங்கியதால் தம்பி பற்றி கேட்பதை நிறுத்தி விட்டான்.

தங்கை பிறந்த பின் அவனுடைய மாற்றங்கள் வித்தியாசமானதாக இருந்தது. அவனுடைய உலகத்தில் அவன் சிலவற்றை மறந்து பயணிப்பது எனக்கும் நல்லதெனப்பட்டது. இரவிரவாக இரட்டைவாய்க்கால் அதிர்ந்தது. இராணுவம் மிகக் கிட்டவாக வந்து விட்டதை உணர்த்தும் விதமாக புலிகளின் ஆட்லறிகள் வலைஞர்மடத்தை விட்டு இரட்டைவாய்க்காலுக்கு வந்திருந்தது. ஆட்லறியை கடற்பகுதியில் வைத்து இராணுவத்தை நோக்கி விடுதலைப் புலிகள் ஏவிக் கொண்டிருந்தார்கள்.

இராணுவமும் புலிகளும் மாறி மாறி குண்டுகளைப் பொழிந்து அதிகாலை நான்கு மணிக்கு ஓய்வுக்கு வந்தார்கள். நாம் அங்கிருந்து புறப்பட்டோம். எமக்கு இடம் தந்த திருநெல்வேலி யாழ்ப்பாண அக்கா குடும்பத்தையும் எம்மோடு வருமாறு கேட்டோம். அவர்கள் அங்கிருந்து ஆமிக்கட்டுப்பாட்டுக்குள் போகப்போவதாக கூறினர். இந்தப் பதுங்குகுழிகள் பாதுகாப்பானவையாக இல்லை என்பதை கூறியும் அந்த வீட்டுத் தலைவன் மிகப் பிடிவாதமாக வர மறுத்து விட்டார்.


நாம் புறப்பட்டு வெள்ளைமுள்ளி வாய்க்கால் பிள்ளையார் கோவிலடியை அடைந்தோம். இரட்டைவாய்க்காலில் சந்தித்த அந்தக் குடும்பத்து அக்காவும் ஒரு பிள்ளையும் குண்டுவீச்சில் இறந்து விட்டதாகவும் தந்தையும் மூத்த பெண் பிள்ளையும் தப்பியதாகவும் போர் முடிவுற்ற காலத்தில் யாழ்ப்பாண பேருந்து நிலையத்தில் அந்தக் குடும்பத் தலைவனை கண்டபோது விடயத்தைச் சொல்லிச் சொல்லி குமுறி அழுதார்.

வெள்ளை முள்ளிவாய்க்காலில் இருந்தபோதுதான் கணவரும் காயமடைந்தார். தொடைப் பகுதியிலும் பாதங்களிலும் காயம் ஏற்பட்டது. மருந்து வசதி இல்லை.

(சாட்சியம் நீளும்)

யோக நாராயணன்

# கலைந்து போகும் நாயகக் கனவுகள்



இலங்கையின் அரசியலில் சிங்கள மக்களின் வீரநாயகனாக விளங்க வேண்டுமென்றால் இரு விடயங்களில் பிரதான கவனம் செலுத்த வேண்டும் என்ற போக்கு பல முக்கிய சிங்கள அரசியல் தலைவர்களால் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஒன்று தமிழ், முஸ்லிம் மக்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக்கி அவர்களின் நியாய மான உரிமைகளை மறுப் பதன் மூலம் சிங்கள இனத்தின் மேலாண்மையை நிலைநிறுத்து வது. மற்றது படையினர் எவ்வளவு படுமோசமான குற்றங்கள் மனித குல விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டாலும்கூட அவர் களைத் தண்டனைகளுக்கு அப்பாற்பட்டவர்களாக்குவதும் - அவர்களின் நலன்களை முதன் மைப்படுத்தியே ஏனைய விடயங் களை வகுக்கும் நடவடிக்கை.

சிங்கள இனத்தின் மேலாண் மையை உருவாக்கி நிலைநிறுத் தும் முயற்சியை 1956 ஆம் ஆண்டிலேயே எஸ்.டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆரம்பித்து வைத்துவிட்டார். எனினும் அவர் தமிழ் மக்களின் எதிர்ப்புக் காரணமாக இடையி லேயே சில விட்டுக் கொடுப்பு களை மேற்கொண்டமையும் மறுக்க முடியாது. ஆனால் அவர் இன ஒடுக்குமுறை என்ற வட்டத்துக்குள் மட்டும் நின்றுவிடாமல் தேசிய இனங்களின் மொழி, கலை, இலக்கியம், கல்வி, சுகாதாரம், பொருளாதாரம் என்பனவற்றை வளப்படுத்துவதிலும் தீவிர கனவம் செலுத்தியமையை மறந்துவிட முடியாது. அவர் ஓர் உண்மையான சிங்கள தேசியவாதியாகவும் செயற்பட்டமையால் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு தங்கள் தனித்துவ அடையாளங்களை நிலைநிறுத்தும் வாய்ப்புகள் கிட்டின. ஆனால் அவர் ஆயுதப் படையினரை அரசாங்கத்தால் வழிநடத்தும் விடயத்தில் எவ்வித விட்டுக் கொடுப்பையும் செய்யவில்லை.

இதுபோன்றே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமிழ் மக்களுக்கு எதிரான ஆயுத ஒடுக்குமுறையை ஆரம்பித்து, கொடூரமான முறையில் முன்னெடுத்த போதிலும் இராணுவத்தை அவர் தனது கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருந்தார். அப்போதைய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தன்னிச்சையாகச் செயற்பட முனைந்தபோது அவரின் பதவி மாற்றப்பட்டதை மறுத்துவிட முடியாது. ஆனால் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்பு இன ஒடுக்குமுறை என்பது இன அழிப்பு என்ற வடிவத்தை எடுத்தது. அவர் தனது சகோதரரும், முன்னாள் படை அதிகாரியுமான கோத்தபாய ராஜபக்ஷ விடம் ஆயுதப் படைகளின் மீதான கட்டுப்பாட்டைக் கையளித்த பின்பு இராணுவம் சகலவிதமான சட்டவிரோத நடவடிக்கைகளையும் மனிதகுல விரோத நடவடிக்கைகளையும் கையிலெடுத்தது. அவர்கள் எந்தக் குற்றங்களுக்காகவும் தண்டிக்கப்பட முடியாத வரம் பெற்றவர்களாயினர்.

நாட்டிலிருந்து பயங்கரவாதத்தை ஒழித்தவர்கள் என்றும், தேசத்தைக் காக்க அர்ப்பணிப்புடன் பாடுபட்டு உயிர்த்தியாகம் செய்தவர்கள் எனவும் போற்றப்பட்டு அவர்களின் கொடிய குற்றங்கள் யாவும் 'தேசப்பற்று' வர்ணம் பூசப்பட்டு அழகுபடுத்தப்பட்டன. தமிழ் மக்கள் தங்கள் உரிமைகள் தொடர்பாக மூச்சு விட்டாலும்கூட நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் என ஒப்பாரி வைக்கப்பட்டு சிங்கள மக்களை மகிந்த குழுவினர் ஏமாற்றித் தங்கள் பின்னால் அணி திரட்டினர். இன ஒடுக்குமுறையைத் தீவிரப்படுத்தல், இராணுவ மேலாண்மையை நிலைநிறுத்தி அவர்களைக் குற்றங்களில் இருந்து காப்பாற்றல் என்ற இரு ஆயுதங்களையும் கையேந்தியே இவர்கள் ஆட்சியிலிருக்கும்போதும் சரி ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பின்பும் சரி சிங்கள மக்களின் வீரநாயகர்களாக வலம் வருகின்றனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சிக்கு வந்த பின்பு தனது அதிகாரத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்தவும் ஒரு சிங்கள மக்களின் நாயகனாகத் தன்னை முன்னிறுத்தவும் அதே ஆயுதங்களைக் கையில் எடுத்துள்ளார். மஹிந்த ராஜபக்ஷ வின் ஆட்சியில் ஒரு தலையாட்டி அமைச்சராக மூச்சுத் திணறிக் கொண்டிருந்த அவர் நாட்டின் அதிகாரமுள்ள தலைவராக உயர்ந்துள்ளார் என்றால் அது தமிழர், முஸ்லிம், மலையக மக்கள் வழங்கிய பேராதரவினால்தான் என்பதை அவர் வெகுசுலபமாக மறந்துவிட்டார். வெளியில் சொல்லாவிட்டாலும் மஹிந்தவுக்கு எவ்விதத்திலும் குறைந்துவிடாமல் இன ஒடுக்கு முறை நடவடிக்கைகளைத் தொடர்ந்து வருகிறார். அது மட்டுமின்றித் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு நடவடிக்கையின்போது படையினரால் மேற்கொள்ளப் பட்ட போர்க் குற்றங்கள், மனித குல விரோத நடவடிக்கைகள் என்பனவற்றிலிருந்து அவர்களைப் பாதுகாக்க தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக கடந்த மாதம் 15 ஆம் திகதி அவர் ஊடகப் பிரதானிகளைச் சந்தித்தபோது தான் இனி ஐ.நா. சபையில் உரையாற்றும்போது 2015 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் போர்க் குற்றங்கள் மனித உரிமைகள் மீறல் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு மாறாகத் தான் சில முன்மொழிவுகளை மேற்கொள்ளப் போவதாகத் தெரிவித்தார். அது இலங்கையின் பாதுகாப்பு, இறைமை, படையினரின் கௌரவம் என்பதைப் பேணும் வகையிலேயே அமையும் எனவும் தெரிவித்திருந்தார். அதே கருத்தை வீராவேசமாக ஒரு பொதுக்கூட்டத்திலும் முழங்கியிருந்தார்.

ஆனால் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் தொடர்பாக வாய் திறக்கவில்லை. ஊடகவியலாளர்களிடமும் பொதுக்கூட்டத்திலும் ஓங்கி உயர்த்தி வீசிக் காட்டிய வாளைப் பத்திரமாக உறையில் போட்டுவைத்து திருப்பிக் கொண்டு வந்து விட்டார்.

ஆனால் அங்கு அவர் பேசும்போது இலங்கை ஒரு சுதந்திர நாடு என்றும் அதில் வேறு நாடுகள் தலையிடுவதை தான் விரும்பவில்லை என்றும் எனவே சர்வதேச சமூகம் தங்கள் பிரச்சினைகளைத் தாங்களே தீர்க்க அனுமதிக்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்திருந்தார். இலங்கையில் வெளியிடப்பட்ட படையினரைக் குற்றங்களிலிருந்து மீட்கும் வீரம் வேண்டுகோளாகச் சுருங்கி அடங்கிப் போனது.

ஜனாதிபதியின் ஊடகச் சந்திப்பின் வீரமுழக்கத்தை விடுத்து அமெரிக்கத் தூதுவர் ஐரோப்பிய ஒன்றித் தூதுவர்

(22ஆம் பக்கம் பார்க்க)

# குருவாக வேண்டும் ஆசிரியர்கள்

தயாளன்

சர்வதேச ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.




அருளம்பலம் ஆசிரியர்

**ஒக்ரோபர் 5 உலக ஆசிரியர் நாள்.**

குருவுக்கும் ஆசிரியருக்கும் உள்ள வேறுபாடு என்ன? இது குறித்து எல்லா ஆசிரியருக்கும் தெரிந்திருக்கும் என்றில்லை. தெரியாதவர்களுக்காக தி இந்து (15 மே 2017 - வணிக வீதி - பக்கம் 03) நாளிதழில் சோம. வீரப்பன் (somaiahveerappan@gmail.com) என்பவர் கட்டுரையின் ஒரு பகுதியைப் படிப்போம்.

‘சாணக்கியர் என்ற பெயரையும் அர்த்த சாஸ்திரம் எனும் நூலையும் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். சாணக்கியர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவர்.



மகத நாட்டைச் சேர்ந்தவர். (தற்போதைய பீஹார்) ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். குடில கோத்திரத்தில் பிறந்த அந்தணர் என்பதால் கௌடில்யர் என்ற பெயரும் இவருக்கு உண்டு. சாணக்கியர் தோற்றப்பொலிவு இல்லாதவர். ஆனால் மகா அறிவாளி. சோக்ரடீஸ் அப்படித்தானே! இந்தக் கதையைக் கேளுங்கள்.

ஒருநாள் சாணக்கியரைப் பார்க்க ஒரு சீன யாத்திரிகர் வந்திருந்தார். அவரை அன்புடன் வரவேற்ற சாணக்கியர் உடனே தனது அறையில் எரிந்துகொண்டிருந்த விளக்கை அணைத்துவிட்டார். அறையில் இருள் சூழ்ந்தது.

வந்த யாத்திரிகருக்கு ஒன்றும் புரியவில்லை. சாணக்கியரோ அமைதியாக அணைக்கப்பட்ட விளக்கின் அருகில் இருந்த மற்றொரு விளக்கினை ஏற்றினார். அறையில் ஒளி பரவியது. ஆனால் யாத்திரிகருக்கு குழப்பம் அதிகரித்தது.

அவரால் ஆவலை அடக்க முடியவில்லை. எரிகின்ற விளக்கை அணைத்துவிட்டு, அதேபோன்ற இன்னொரு விளக்கை ஏன் ஏற்றவேண்டும்? அவர் கேட்டே விட்டார்.

சாணக்கியர் நிதானமாகப் பதில் கூறினார் ‘நீங்கள் வரும் முன்பு வரை நான் அரசாங்கப் பணி குறித்த விபரங்களைப் படித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எரிந்து கொண்டிருந்த விளக்கு அரசாங்கம் கொடுத்த எண்ணெயில் எரிந்தது. எமது சந்திப்போ என் சொந்த வேலைக்காகவே. எனவே அதனை அணைத்துவிட்டேன்” என்றார். சாணக்கியரிடம் அரசர் எவ்வளவு எண்ணெய் செலவாயிற்று என்று கேட்கவா போகிறார்? கண்ணசைவில் குடம் குடமாய்க் கிடைக்குமே!

99 % நேர்மை என்றுண்டா என்ன? பாடத்தைச் சொல்லிக் கொடுப்பவர் ஆசிரியர். சொன்னபடி நடந்து காட்டுபவரையே குரு என்பார்கள்.

• • •

இதனை வாசிக்கும்போதுதான் என் மனதில் நீண்டகாலம் இருந்த கேள்விக்கு விடை கிடைத்தது. சில வார்த்தைகள் சொல்பவரின் ஆழ்மனதை பிரதிபலிப்பதாலோ என்னவோ கேட்கும் யாருக்காவது ஆழமாகப் பதிந்து விடும். விபரம் தெரியாத இரண்டாம் வகுப்பு (7 வயது) முதல் எனக்கான பாதை இதுதான் என முடிவெடுத்த 25 ஆவது அகவை வரை நான் மாமிச உணவு உண்ணவில்லை. நான் போக நினைத்த பாதைக்கு எனது உணவுப் பழக்கம் இடைஞ்சலாக இருக்கும் எனக் கருதியதாலேயே அந்த நிலைப்பாட்டைப் பின்னர் மாற்ற நேர்ந்தது.

அருளம்பலம் வாத்தியார் என்பவர் எமது அயலில் வசித்து வந்தார். அவரது பெயர் ஆறுமுகம். உண்மையான பெயரை அவருடன் கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் சிலருக்கே தெரியும். எமது கிராமத்தில் ஒவ்வொருவரையும் இவருக்குத் தெரியும். யாராவது பாடசாலைக்கு வராவிட்டால், யாராவது ஒரு மாணவனை அனுப்பி ஏன் குறித்த மாணவன் வரவில்லை என்று கேட்டுவரச் சொல்வார். இதனால் சுகயீனம் அல்லது தவிர்க்க முடியாத எந்த நிகழ்வு காரணமாக தமது பிள்ளை பாடசாலைக்கு வரமுடியாது எனப் பெற்றோரே பாடசாலைக்கு நேரில் வந்து விளக்கமளிக்கும் வழக்கம் அந்தக் காலத்தில் இருந்தது. அவ்வளவுக்கு எமது கிராமத்து மக்கள் இவரை மதித்தனர்.

இந்த வாத்தியார் குடியிருந்தது ஒரு நாற்சார் வீட்டில். அங்கு சிறுவர்களுக்கான புத்தகங்கள் நிறைய இருந்தன. கண்ணன் என்றொரு சஞ்சிகையை அந்நாளைய சிறுவர், சிறுமியர் விரும்பிப் படிப்பர். எந்த நேரமும் சிறுவர் அங்கே சென்று படிக்கலாம். யாரிடமும் அனுமதி கேட்கத் தேவையில்லை. வாசித்த பின் அங்கேயே தூங்கி எழுந்து செல்வதும் அவர்களுக்குப் பழக்கமாயிருந்தது. பொதுவாகவே குழந்தைகள் இல்லாதவர்கள் குழந்தைகள் விடயத்தில் கூடிய அக்கறை காட்டுவார்கள். காமராஜர், எம். ஜி. ஆர். போன்றோர் இதற்கு உதாரணம். ஆட்சிப்பீடம் ஏறியதும் இருவருமே குழந்தைகளின் கல்வி, மதிய உணவு போன்ற விடயங்களில் அதிக அக்கறையும் அதில் விடாப்பிடியான போக்கையும் கடைப்பிடித்தவர்கள்.

இதுபோல தனக்குக் குழந்தைகள் இல்லாவிட்டாலும் ஊரிலுள்ள குழந்தைகளின் நலனுக்காக தனது வருமானத்தில் கணிசமான தொகையை செலவிடுவார் அருளம்பலம் வாத்தியார். இவர் புலால் உணவு உண்பது பாவம் என வகுப்பில் போதித்தார். இவரது வீட்டில் மரக்கறி உணவு மட்டுமே சமைக்கப்படுகிறது என்பது எனக்குத் தெரியும். இதைச் சொல்பவர் தகுதியான ஆளாக இருந்ததால் அவரது அறிவுறுத்தல் எனது மனதில் ஆழமாகப் பதிந்திருக்க வேண்டும். பலாத்காரமாக எனது ஐயா மீனைத் திணித்துப் பார்த்தார். நான் வாந்தியெடுக்கவே சரி எப்படியாவது இருந்து விட்டுப் போகட்டும் என விட்டுவிட்டார். அந்தக் காலத்தில்தான் இப்படியான ஆசிரியர்கள் இருந்திருப்பார்கள் என்று சொல்லமுடியாது. நிகழ்காலத்திலும் இவ்வாறனோரைக் காண முடிகின்றது.

• • •



நல்லாசிரியர் விருதுபெறும் ஹென்றி பாஸ்கர்

தமிழகத்தின் காரைக்குடியில் வள்ளல் அழகப்ப செட்டியாரால் ஆரம்பிக்கப்பட்ட மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேல்நிலைப் பள்ளி பணிபுரிந்த மோசஸ் ஹென்றி பாஸ்கர் என்பவரின் பிரியாவிடை நிகழ்வில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் கிடைத்தது. இவரது பெற்றோர் மோசஸ் - ஜானகி இருவருமே ஆசிரியர்கள். சகோதரிகள் இருவரும், இரு அண்ணிமார், வீட்டின் இருபுறமும் இருக்கும் இரு சிறியதாய்மார், ஒரு சித்தப்பா அனைவருமே ஆசிரியர்கள். இவரது வாழ்க்கைத் துணையும் ஆசிரியை. எனவே எங்கே சுற்றினாலும் தினசரி ஆசிரியப் பணியை எதிர்நோக்கும் சிரமங்களும் அவற்றைக் கையாண்ட விதமும் மாணவர்களை எப்படிக் கையாளக்கூடாது என்பதும் மற்றவர்களின் அனுபவங்களில் இருந்து இவருக்குத் தெரிய வந்துள்ளது போலுள்ளது. எனவே அதற்கேற்றவிதமாக மாணவர்களைக் கையாண்டார்.

அதுமட்டுமல்லாது வசதி குறைந்த மாணவர்களைக் கைதூக்கி விடுவதிலும் சிறப்புக் கவனமெடுத்தார். வீட்டிலே வந்தால் நான் இலவசமாகப் பாடம் கற்பிக்கிறேன் என்று சொன்னார். அதற்கு ஒரு மாணவன் நீங்கள் பாடசாலையில் கற்பிப்பதே எங்களுக்குப் புரிகிறது. அதுவே போதும். அப்படி ஏதும் சந்தேகம் வந்தால் வகுப்பிலேயே கேட்டுக் கொள்கிறேன் என்று சொன்ன சம்பவம் இதற்கு ஓர் உதாரணம்.


விஜய் தொலைக்காட்சியில் நீயா - நானா? நிகழ்ச்சி நடத்தும் கோபிநாத் ஒருநாள் ‘உங்களது ரோல்மொடல் யார்?” எனக் கேட்டபோது ‘ஹென்றி பாஸ்கர் சேர்தான்” என்று ஒரு மாணவன் பதிலளித்ததை பிரிவுபசார

(18ஆம் பக்கம் பார்க்க)

# எப்படி இருக்கிறார் திருமுருகன் காந்தி?

தீவிர தமிழீழ ஆதரவாளர், ஈழ ஆதரவாளர்கள் அனைவரையும் ஓரணியில் ஒன்றுதிரட்டியவர் என்ற பெருமைக்கு உரியவர் திருமுருகன் காந்தி. இந்தியா என்ற மாயைக்குள் சிக்கி நிற்பவர்களை தமிழ்த் தேசியத்தின்பால் திசை திருப்பிய பெருமை சமூக செயற்பாட்டாளரான திருமுருகன் காந்தியையே சேரும்.

இந்திய ஆட்சியாளர்களால் திட்டமிட்டுக் கைது செய்யப்பட்ட திருமுருகன் 55 நாட்களின் பின் கடந்த 2 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். அவர் சிறையில் இருந்த நாளில் அவரின் தந்தை அளித்த நேர்காணல் இங்கு பிரசுரமாகிறது.



"மயங்கி விழுந்தார்", 'உணவில் ஏதோ கலந்து கொடுத்து விட்டார்கள்", 'கொலை செய்யப் பார்க்கிறார்கள்" என்ற தகவல்கள், 'மே 17 இயக்க'த்தின் ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தியின் உடல்நிலை தொடர்பாக வட்டமடிக்கின்றன. சமூகச் செயற்பாட்டாளர்கள் பலரும் அவருக்காக பதற்றத்துடன் குரல் கொடுக்கிறார்கள். ஆனாலும் இறுக்கத்தைத் தளர்த்த மறுக்கிறது இந்திய காவல்துறை.

வேலூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், உடல்நலக்குறைவால் தற்போது மருத்துவமனையில் இருக்கிறார். திருமுருகன் காந்தியைச் சந்தித்து விட்டுத் திரும்பியிருந்த அவரின் தந்தையான சா.காந்தியைச் சந்தித்தோம். கலங்கிய கண்களுடன் அதே சமயம் தீர்க்கமாகப் பேசுகிறார் காந்தி.

"ஜெனிவாவிலிருந்து திரும்பி வந்ததுமே அவரைக் கைது பண்ணணும் என்ற எண்ணம் காவல்துறைக்கு இருந்தது. அவங்க போட்ட வழக்குகளில இருந்து நீதிமன்றம் விடுவிச்சாலும், 'பெரியார் சிலைக்கு மாலை போட்டார்'னு சாக்கு சொல்லி கைது பண்ணுறாங்க. முதலில் புழல் சிறைக்குத்தான் கொண்டு போனாங்க. அடுத்த நாளே வேலூருக்கு மாத்திட்டாங்க. நிறைய அலைச்சல். இடையில் கிட்டத்தட்ட 15 முறைக்கு மேல சென்னைக்குக் கூட்டிட்டு வந்துருக்காங்க.

வழக்குன்னு சொல்லியே தூத்துக்குடி, சீர்காழி, நாகர் கோவில் என அலைக்கழிச்சிருக்காங்க. சரியான உணவு இல்ல. காலைக்கடன் கழிப்பதற்குக்கூட சரியான வசதிகள் இல்லை. இதெல்லாமே திருமுருகனின் உடல்நிலையை ரொம்ப பாதிச்சிடுச்சு. சீர்காழி நீதிமன்ற நீதிபதியிடம், 'எனக்குத் தொடர்ந்து வயிற்றுப்போக்கு இருக்கு. உடம்பு சரியில்ல. மருத்துவமனைக்குப் போகணும்'னு நேரடியாகவே முறையிட்டார். 'உடனே மருத்துவமனைக்குக் கூட்டிட்டுப்போங்க'னு நீதிபதி உத்தரவு போட்டார். அதன்பிறகுதான், மருத்துவமனைக்கே கூட்டிட்டுப் போயிருக்காங்க."

'மனித உரிமை ஆர்வலர் ஹென்றி திபேன் சொல்லித்தான், தனிமைச் சிறையில திரு இருக்கிறது எங்களுக்குத் தெரியும். நாங்க வருத்தப்படக் கூடாதுன்னு இதை எங்கிட்ட திரு சொல்லல. நாங்க அவரைப் பார்க்கறதுக்கான வாய்ப்பு ரொம்பவும் குறைவு. வாரம் மூணு நாள்தான் நாங்க பார்க்குறதுக்கு அனுமதி. ஆனா, அப்பவும் விசாரணைக்கு வெளியே கூட்டிட்டுப் போயிடறாங்க. பலநேரம் நீதிமன்ற வாசல்ல நின்னுதான் பார்க்க முடிஞ்சது. சில நிமிசம் மட்டும் பேச முடியும்.

பலநாள் மதிய உணவே கொடுக்கலைன்னு கேள்விப்பட்டேன். இதுபோன்ற காரணங்களால சிறைக்குள்ளேயே திரு மயக்கம் போட்டு விழுந்து, அப்படியே கிடந்திருக்கார். ஒரு சிறைக்காவலர் பார்த்து தகவல் சொன்ன பின்னாடிதான் சிகிச்சை கொடுத்திருக்காங்க. மருத்துவ மனையில ரெண்டு நாள் இருக்க ணும்னு மருத்துவர்கள் சொன்ன தைக்கூட காவல்துறை ஏத்துக் கலை" என்றவரிடம் "தேச விரோத நடவடிக்கைத் தடுப்புச் சட்டத் தின்கீழ் வழக்குப் பதிவு செய்தது பற்றிச் சொல்லுங்கள்?" என்றோம்.



'திரு மீது பதியப்பட்ட உபா (UAPA) வழக்கின் முதல் தகவல் அறிக்கையில் தவறு இருந்தது. '25.7.2017 அன்று பலஸ்தீன விடுதலை பற்றி திருமுருகன் காந்தி பேசியபோது ஈழ விடுதலை பற்றியும் பேசினார்" என்று வழக்கில் எழுதியிருந்தார்கள். ஆனால், அந்தத் நாளில் திரு, குண்டர் சட்டத்தில் கைதாகி சிறையில் இருந்தார். பிறகு அதைத் திருத்திவிட்டு, 2017 அல்ல... 2014 என்று பதிவு செய்தார்கள். அதை நீதிமன்றம் ஏத்துக்காம, உபா சட்டத்தில் திருவை கைது செய்ய ஆட்சேபணை தெரிவிச்சது. பிறகு இன்னொரு வழக்கு, 'பெரியார் சிலை, அம்பேத்கர் சிலைக்குக் கூட்டமாகச் சென்று மாலை போட்டார்'னு தேச விரோதச் செயல் (Sedition) வழக்குப் போட்டாங்க. இன்னும் சில வழக்குகளும் இருக்கு. இதில், சில வழக்குகளை நீதிமன்றம் ரத்து பண்ணியிருக்கு. நாங்களும் சட்டரீதியில் தொடர்ந்து போராடுறோம். சீக்கிரமே திருவுக்கு பிணை கிடைக்கணும்" என்றார்.

"திருமுருகன் காந்தியின் மனைவி, குழந்தைகள் எப்படி இருக்கிறார்கள்?" என்று கேட்டோம்.

"இயக்க வேலைகளில மும் முரமா இருந்தாலும் எவ்வளவு நேரமானாலும் இரவு வீட்டுக்கு வந்துடுவாரு. குழந்தைகிட்ட ரொம்பவே அன்பா இருப்பார். திரு சிறைக்கு போய் 50 நாள்களுக்கு மேலாச்சு. மனைவி யும் குழந்தைகளும்கூட சரியா அவரோட பேச முடியலை. பல நேரங்களில் நீதிமன்றத்துக்கு அழைச்சிட்டு வரும்போது தூரத்தில இருந்து மட்டுமே பார்க்க முடியுது. மருமகள் புரிஞ்சிக்கிட்டாங்க.

குழந்தைகளின் கேள்விகளுக்கும் அழுகைக்கும்தான் என்ன பதில் சொல்றதுன்னு தெரியலை. நவீன ஓவியத்துல அவருக்கு ஈடுபாடு அதிகம். ஒரு வீர.சந்தானம் மாதிரி அவர் வேற எங்கேயோ இருந்திருக்க வேண்டியவர். எம்.சி.ஏ பெஸ்ட் அவுட்கோயிங் ஸ்டூடன்ட்டா வெளிய வந்தவர் என் மகன். நல்ல வேலையும் கிடைச்சுது. எல்லாரையும் போல வழக்கமான வாழ்க்கையை அமைச்சிக்காம சமூகத்துக்காக தன்னையே அர்ப்பணிச்சுக் கிட்டார். மக்களுக்கான பாதையாக தன் பாதையை மாத்திக்கிட்டார்" என்கிறார் அமைதியாக!



நீதிமன்றத்தில் திருமுருகன் காந்தியுடன் வைகோ

# வாரப்பலன்

### மேடம்

இவ்வாரம் சூரியன், குரு, சந்திரனால் நன்மை உண்டு. வாழ்வில் புதிய வளர்ச்சிப்பாதை உருவாகும். சகோதரர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். வாகனத்தில் பராமரிப்பு செலவு கூடும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம்.

### ரிஷபம்

இவ்வாரம் புதன், சந்திரன் ஓரளவு நன்மை தருவர். வாழ்வில் முன்னேற புதிய வழிகளை கண்டறிவீர்கள். நண்பரின் உதவி கிடைக்கும். கடனில் ஒருபகுதியை செலுத்துவீர்கள். உடல் நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில் போட்டியை சரி செய்வீர்கள்.

### மிதுனம்

இவ்வாரம் குரு, சுக்கிரன், சந்திரன் அனுகூலமாக உள்ளனர். வேலைகளில் உத்வேகம் இருக்கும். உறவினர் பாசத்துடன் நடந்து கொள்வர். அளவான உழைப்புடன் உடல் ஆரோக்கியத்தைத் பேணுவீர்கள். மனைவியின் யோகம் அதிர்ஷ்டபலன் தரும்.

### கடகம்

இவ்வாரம் புதன், சுக்கிரன், சனீஸ்வரர் ராஜயோக பலன் வழங்குவர். பேச்சில் வசீகரம் கூடும். வேலைகளில் கவனம் அதிகரிக்கும். தாய்வழி உறவினர் அன்புகொள்வர். பிள்ளைகள் நல்ல பண்புகளைப் பின்பற்றுவதற்கான இனிய சூழல் உருவாகும்.

### சிம்மம்

இவ்வாரம் சுக்கிரன், செவ்வாய், கேது, சந்திரன் அதிக அளவில் நற்பலன் தருவர். தாயின் அன்பு கிடைக்கும். புத்துணர்வுடன் பணிகளை நிறைவேற்றுவீர்கள். உடன்பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். வீட்டை அபிவிருத்தி செய்வீர்கள்.

### கன்னி

இவ்வாரம் சுக்கிரன், குரு அனுகூலமாக உள்ளனர். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும். நிம்மதி நிறைந்த வாழ்வு உருவாகும். வெளியூர் பயணங்களினால் எதிர்பார்த்த நன்மை வந்து சேரும். நண்பர்கள் உதவுவர்.

### துலாம்

இவ்வாரம் சுக்கிரன், சனீஸ்வரர், ஆதாய பலன் தருவர். தகுதி உணர்ந்து பணிகளில் ஈடுபடுவீர்கள். நண்பரின் கருத்து நல்ல பயன்தரும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்கள் உங்களின் ஆலோசனையை ஏற்றுக்கொள்வர். சொத்தில் வளர்ச்சியும் பணவரவும் கூடும்.

### விருச்சிகம்

இவ்வாரம் சூரியன், செவ்வாய், கேது, சுக்கிரன் என்பன நற்பலன் தருவர். வேலைகளில் அவதானம் மிகுந்திருக்கும். வாழ்வில் கிடைக்கின்ற புதிய வாய்ப்புகளை ஆர்வமுடன் பயன்படுத்துவீர்கள். குடும்பத்திற்கான முக்கிய தேவை நிறைவேறும்.

### தனுசு

இவ்வாரம் சூரியன், புதன், குரு, சுக்கிரன் ஆகியன நற்பலன் வழங்குவர். நண்பரின் உதவி நெகிழ்ச்சி தரும். சமூகத்தில் மதிப்புக் கூடும். வாகனத்தின் பயன்பாடு திருப்திகரமாகும். தெய்வ வழிபாடு சிறப்பாக நடத்துவீர்கள். எதிர்ப்பு விலகி வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும்.

### மகரம்

இவ்வாரம் சந்திரனால் நற்பலன் ஏற்படும். எவரிடமும் நிதானித்து பேசுவது நல்லது. அறிமுகமில்லாதவர்க்கு வீடு, வாகனத்தில் இடம் கொடுக்கவேண்டாம். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். வழக்கில் வெற்றி கிடைக்கும். வியாபாரத்தில் போட்டியால் லாபம் குறையும்.

### கும்பம்

இவ்வாரம் சனீஸ்வரரால் ஆதாயபலன் உண்டு. சமூக நிகழ்வுகள் இனியதாக அமையும். செயலில் அறிவாற்றல் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவர் அன்பு பாராட்டுவர். வெளியூர் பயணம் போகலாம். குடும்ப விவகாரங்களில் சுமுக தீர்வு ஏற்படும்.

### மீனம்

இவ்வாரம் செவ்வாய், புதன், சுக்கிரன், கேது அனுகூலமாக உள்ளனர். பொது இடங்களில் எவரிடமும் சூழல் உணர்ந்து பழகுவீர்கள். எண்ணங்களில் புதுமையான கருத்து உருவாகும். குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. அதிகரிக்கும்.



வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய வட மாகாணப் பண்பாட்டுப் பெருவிழா இரு தினங்களாக முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கற்சிலைமடு பண்டாரவன்னியன் மாகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.



அம்பாறை - பொத்துவில் 60ஆம் கட்டை கனகர் கிராமத் தமிழ் மக்கள் தாம் பூர்வீகமாக வாழ்ந்து வந்த காணிகளை விடுவிக்கக் கோரி 50இற்குகு மேற்பட்ட நாளாகப் போராடி வருகின்றனர்.



அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி வவுனியாவில் போராட்டம் ஒன்று கடந்த முதலாம் திகதி முன்னெடுக்கப்பட்டது.




கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப்பணிகளை - முன்னெடுக்கப்பட்டுள்ளது




மட்டக்களப்பு மாவட்ட செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 18 ஆண்டு நிறைவு தின விழா வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் நடைபெற்றது மாவட்ட முதல்வர் உரையாற்றுகின்றார்.

# உச்சியைத் தொட செவிடாய் இரு



சிறிய தவளைகள் சேர்ந்து தங்களுக்குள்ளே ஒரு ஓட்டப்பந்தயத்தை வைத்துக் கொள்ள ஏற்பாடு செய்து கொண்டன. ஓட்டப்பந்தயத்திற்கான நாளும் நெருங்கி வந்தது. தவளைகளின் ஓட்டப்பந்தயத்தை காண பலரும் கூடி இருந்தார்கள். ஓட்டப்பந்தயத்தில் தவளைகள் ஓடி, அருகில உள்ள ஒரு உயரமான கோபுரத்தை தொட வேண்டும். அது தான் போட்டி விதி. முதலில் தொடுபவர் வெற்றியாளர். போட்டியும் ஆரம்பமானது. கூட்டமாய் கூடி இருந்தோர்கள் பலரும் இது சுலபமான போட்டி இல்லை. உங்களால் அந்தப் கோபுரத்தை அடைய முடியாது என்று தவளைகளை நோக்கி கத்திக் கொண்டிருந்தனர். ஒரு சிலர் “இந்தத் தவளைகளால் இந்தக் கோபுரத்தில் உச்சியை தொடவே முடியாது! சாத்தியமே கிடையாது!” என கூறினார் கூட்டத்திலிருந்து இப்படியாக கோசங்கள் வந்த வண்ணமே இருந்தன. மெல்ல ஒவ்வொரு தவளைகளாக, தங்களால் முடியாது என்ற வகையில் சோர்ந்து போட்டியிலிருந்து நீங்கி கொண்டன “இதில எந்தத் தவளையும் அந்த உச்சியைத் தொடப்போவதில்லை . அது ரொம்பக் கடினமானது” கூடியிருந்தோர் தங்கள் கோசங்களை தொடர்ந்து கொண்டேயிருந்தனர். இப்படியிருக்க, பல தவளைகளும் களைப்படைந்து, போட்டியிலிருந்து நீங்கிக் கொண்டன. ஆனால், ஒரேயொரு தவளை மட்டும் மேலே மேலே முன்னேறிக் கொண்டிருந்தது. எல்லாத் தவளைகளும் கோபுர உச்சியைத் தொடுவது சாத்தியமற்றது என எண்ணி இடையிலேயே போட்டியிலிருந்து விலகிக் கொள்ள, ஒரு சின்னஞ் சிறிய தவளை மட்டும் உச்சியை நோக்கி முன்னேறிக்கொண்டு இருந்தது . சில வினாடிகளில் உச்சியைத் தொட்டு வெற்றியும் கண்டது அனைவரும் வியந்து போய் எப்படி அந்தச் சிறிய தவளையினால் மட்டும் முடிந்தது என வினாவினார்கள் அப்போதுதான் தெரிந்தது, கோபுர உச்சியைத் தொட்ட அந்தத் தவளைக்கு காது கேட்காது என்று. “முடியாதவர்கள், அவர்களால் முடியாததை உன்னாலும் முடியாது என்று சொல்லுவார்கள். சொல்லுபவர்கள் சொல்லட்டும். அவர்களிடம் நீ, செவிடாக இருப்பதே சில நேரங்களில் பொருத்தமானது,”

உன் காதில் சங்கே ஊதினாலும் உன் வழி செல் ; வெற்றி உனக்கே



## மருவி வந்த மறுகதை

(பழமொழித் திரிபு)

**மாமியார் உடைத்தால் மண் குடம் மருமகள் உடைத்தால் பொன் குடம்.**

மறுகதை


ஒரே தவறை மாமியார் செய்யும் போது அது பெரிதாகக் கருதப்படுவதில்லை. ஆனால், வீட்டுக்கு வந்த மருமகள் அதே தவறைச் செய்துவிட்டால், அதை மாமியார் பெரிதுபடுத்திவிடுகிறார் என்று பொருள் வருகிறது,

உண்மைக் கதை

மாமியார் உழைத்தால் மண்ணுக்கு உரம்-மரு மகளும் உழைத்தால் பொன்னுக்கு உரம் என்பது தான் உண்மையான பழமொழி. விவசாயி வீட்டில் மாமியாரும் மருமகளும் சேர்ந்து நிலத்தில் உழைத்தால் பொன்னும், பொருளும் சேரும் என்பது அர்த்தம்

## நம்பினால் நம்புங்கள்

## ஆயுத தேசம்




மத்திய ஆபிரிக்க குடியரசை ஆயுத தேசமென்றே அழைக்கிறார்கள். தினசரி 2 டொலர்களை தனி நபர் வருமானமாகக் கொண்ட இந்த நாடு, 59 மில்லியன் டொலர்களை (2015) ஆயுத இறக்குமதி செய்யப் பயன்படுத்தி உள்ளது.

ஆறு ஆண்டுகளுக்கு மேல் நடந்த உள்நாட்டுப் போர் காணமாக, தன் தலைநகரைக் காக்க 14 இராணுவப் படைகளை நியமித்துபாதுகாத்து வருகின்றது. கல்வி, உணவு அனைத்திலும் பற்றாக்குறை நிலவுகின்ற தேசம், போருக்காக மில்லியன் கணக்கான டொலர்களை வருடாவருடம் செலவழிக்கினறது என்பது நம்ப முடியாத ஒன்றுதான்.

## வாரமொரு திருக்குறள்



**1. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை.**

துப்பார்க்கு - உண்பவர்க்கு (சாப்பிடுபவர்க்கு) - அதாவது உண்ணும் உயிரினங்களுக்கு

துப்பாய - உண்ணக்கூடிய (சாப்பிடக்கூடிய)

துப்பாக்கி - உணவாக்கி (சாப் பாடாக்கி) - உணவை விளை வைத்து

உண்பவர்க்கு (உயிர்களுக்கு) சாப்பிடுவதற்கு உகந்த உணவுப் பொருள்களை விளைவித்துத் தருவதோடு, பருகுவோர்க்குத் தானும் ஓர் உணவாக இருப்பதும் மழையாகும்.

**2. விண்இன்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து உள்நின்று உடற்றும் பசி.**

விண்இன்று – ஆகாயத்தில் இருந்து (வரும் மழை)

பொய்ப்பின் - பொய்க்குமா னால் (பெய்யாது விட்டால்)

உடற்றும் - வருத்தும்.

விரிநீர் - பரந்த நீர் (கடல்)

உரிய காலத்தே மழை பெய் யாது பொய்க்குமானால், (பரந்த நீர் நிறைந்த) கடலால் சூழப்பட்ட உலகமாயினும், பசி தோன்றி இந்த உலகத்தினுள்ளே நின்று வருத்தும்.

## அறிவியல் துணுக்குகள்

1. பிளாஸ்டிக் உடைவதற்கு 500 ஆண்டுகள் ஆகின்றன.
2. உலகில் மிக கொடூரமான நில நடுக்கம் 1557ல் சீனாவில் நடந்தது. இதில் சுமார் 8 லட்சம் மக்கள் இறந்தனர்.
3. சூரியனிலிருந்து புறப்படும் ஒளி பூமியை அடைய 8 நிமிடம் 30 வினாடிகள் எடுக்கின்றது.
4. ஆல்பிரட் நோபல் (நோபல் பரிசுகள் இவர் பெயரால் கொடுக்கப்படுகின்றன) 1866ஆம் ஆண்டு டைனமைட்டை கண்டுபிடித்தார்.
5. எபோலா என்னும் வைரஸ் தாக்கினால், ஐந்தில் நான்கு மனிதர்கள் இறந்துவிடுவார்கள்.

## தமிழ் கற்போம்

### ஆய்த எழுத்து என்றால் என்ன?


ஆய்த எழுத்து என்பது தமிழ் கற்றலுக்கான, முதன் மைக் குறியீடு ஆகும். இது ஃ என்றவாறு மூன்றுபுள்ளி வடிவமாக இருக்கும். இதற்கு அஃகேனம், தனிநிலை, புள்ளி, ஒற்று என்னும் வேறு பெயர்களும் உண்டு. இவ்வெழுத்தானது தனக்கு முன்னர் ஒரு குறிலையும், பின்னர் ஒரு வல்லின உயிர்மெய் எழுத்தையும் பெற்றே வரும்.

எ.கா:

அஃது - ‘அ’ குறில். ‘து’ வல்லின உயிர்மெய்

இஃது - ‘இ’ குறில். ‘து’ வல்லின உயிர்மெய்

## உங்களுக்குத் தெரியுமா?



1. பிறக்கும்போது குழந்தைகளுக்கு எத்தனை எலும்புகள் இருக்கின்றன?
2. உலகில் பூக்கள் உற்பத்தியில் முதல் இடம் வகிக்கும் நாடு எது?
3. ஒட்டகச்சிவிங்கியின் கழுத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?
4. நாய்களே இல்லாத நாடு எது?
5. வைரத்தில் மொத்தம் எத்தனை மூலைகள் உள்ளன?

விடைகள் :

1. 350 2. ஒல்லாந்து(நெதர்லாந்து) 3. ஏழு 4. சிங்கப்பூர் . 5. ஆறு

# நடராஜர் வடிவம் உணர்த்தும் தத்துவம்



ஆனந்த நடராஜனின் திருவுருவம் ஐந்தொழில்களை காட்டுவதுடன் ஞான மயமாகிய அறிவுவெளியின் இயல்பையும் அறிவுறுத்துகிறது.

புலிக்கால் முனிவரான வியாக்கிரபாதரும் ஆதிசேடனின் அவதாரமான பதஞ்சலி மகாமுனிவரும் தவம் புரிந்து நடராஜ மூர்த்தியைக் கண்டு ரசிக்கும் பேறு பெற்ற இடம் தில்லைவனம். அண்டமும் பிண்டமும் ஒரே தன்மையுடையவை. பிண்டத்தில் இடை, பிங்கலை, சுழுமுனை நாடிகளுக்கு ஒப்பாக அண்டத்தில் இலங்கை, இமயம், தில்லை எனும் மூன்று தலங்களும் அமைந்திருக்கின்றன.

இடைநாடி இலங்கைக்கு நேராகச் செல்லும், பிங்கலை நாடி நன்மைமிக்க இமயமலைக்கு நேராகப் போகும், நாடுதற்குரிய சுழிமுனை நாடி தில்லை வனத்திற்கு நேரே போய்க்கூடும் எனவும், தாம் அந்தத் திருத்தலத்தில் எப்போதும் ஆனந்த நடனம் செய்வதாகவும் நடராஜ மூர்த்தி ஆதிசேடனுக்குக் கூறினார். அண்டத்திலுள்ள சிதம்பரமும், பிண்டத்திலுள்ள சுழுமுனை நாடியும் நம்முள் ஒத்து நடக்கின்றன.

சித்+அம்பரம்= சிதம்பரம். அம்பரம் எனில் ஆகாயம், வெளி எனப் பொருள்பட்டும், அம்பலம் எனத் திரிவுபட்டும் நிற்கும்.

சிதாகாசமாகிய சபையில் நடனம் புரியும் இறைவனுக்கும் உணர்வு அற்ற பிரபஞ்சம், தூல உருவமாகவும், உணர்வு நிறைந்த பிரபஞ்சம் உறுப்புகளாகவும் இச்சை ஞான கிரியைகள் காரணமாகவும் உயிர்களுக்கு அறிவினை ஆக்கி வைப்பது பயனாகவும், ஐந்தொழில் விரிவே தொழிலாகவும் அமைந்துள்ளன.

சிற்சபையில் நடராஜ மூர்த்திக்கு வலப் பக்கத்தில் களங்கமில்லாத ஆகாய வடிவமாகிய சிதம்பர ரகசியம் இருக்கிறது. காஞ்சியில் பூமி வடிவமாகவும் திருவானைக்காவில் நீர் வடிவமாகவும், திருவண்ணாமலையில் நெருப்பு வடிவமாகவும் திருக்காளத்தியில் காற்று வடிவமாகவும் சூரிய விம்பத்தில் சூரிய வடிவமாகவும் சோமநாதத்தில் சந்திர வடிவமாகவும் எல்லா உயிர்களிலும் பசுபதியாகவும் அமர்ந்த இறைவன் சிதம்பர ரகசியத்தில் ஆகாய மூர்த்தமாக விளங்குகிறான்.

ஆகாயம் ஒலியிலிருந்து பிறக்கிறது இறைவன் கையிலேந்திய டமருகம் ஒலிக் குறிப்பின் வழிவந்த ஆகாயத்திற்கு உற்பத்தித் தாளமாயிற்று. 'பயம் வேண்டாம்' என்னும் குறிப்பைக் காட்டும், அபயக் கை காத்தல் தொழிலைச் செய்கிறது. நெருப்பு அழித்தல் தொழிலைக் காட்டுகிறது.

# இஸ்லாம் + சமாதானம் + அடிபணிதல்


இவ்வுலக வாழ்க்கையைச் சிறப்பாகச் சீரமைத்துக் கொள்வதற்கு இரண்டு விதமான வாழ்வாதாரங்கள் மனிதனுக்குத் தேவைப்படுகின்றன. ஒன்று தனிப்பட்ட வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் நடத்திச் செல்வதற்கும் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அவசியமான எண்ணற்ற சாதனங்கள். மற்றொன்று சமுதாயத்திலும் அதன் பண்பாட்டிலும் நீதியையும் அமைதியையும் நிலைநாட்டுவதற்காகத் தனிப்பட்ட மற்றும் கூட்டுவாழ்க்கை பற்றிய அறிவு.


மனிதனுடைய ஆன்மிகத் தேவைகளையும் சமுதாயப் பண்பாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்காக மனித இனத்தினரிடையே தன் தூதர்களை(நபிமார்களை) தோற்றுவித்து மனிதனை நேர்வழிக்கு இட்டுச் செல்லும் வாழ்க்கைத் திட்டங்களையும் அருளினான். இந்த வாழ்க்கைத் திட்டம்தான் இஸ்லாம்.

இந்த உலகத்திற்கு அனுப்பப்பட்ட நபிமார்கள் அனைவரும், அல்லாஹ்வுக்கு அடிபணியவும், அவனுடைய பாதையில் வழிநடக்கவும் மனித சமுதாயத்தை அழைத்தார்கள்.

இஸ்லாம் என்பது ஒரு அரபிச் சொல். அதற்கு அடிபணிதல், சரணடைதல், கீழ்படிதல் என்றெல்லாம் பொருளுண்டு. இஸ்லாம் என்பதற்கு மற்றொரு பொருள் 'சமாதானம்' என்பதாகும். ஒருவர் இறைவனுக்கு அடிபணிவ தாலும் கட்டுப்பட்டு நடப்பதாலும் மட்டுமே அக-புற அமைதி அடிபணியும். இத்தகைய அடிபணியும் தன்மை வாய்ந்த வாழ்க்கை யானது தனிநபர் உள்ளத்தில் சாந்தியையும் சமுதாயத்தில் உண்மையான அமைதியையும் நிலைநாட்டுகிறது.

"நன்னம்பிக்கை கொண்டோர் அல்லாஹ்வின் திருநாமத்தைச் செவியுற்றதும் அவர்களுடைய இதயங்கள் அமைதிபெறுகின்றன." (குர் ஆன்: *13: 28*) இவ்வாறு இஸ்லாம் மார்க்கத்தில் இறைவனால் அனுப்பப்பட்ட அத்தனை வேதநூல்களும் மனித சமுதாயத்திற்குச் சமாதானத்தையும் நல்லுபதேசத்தையும் வழங்கியுள்ளன. அதனைக் கையிலெடுத்து ஒவ்வொரு மனிதனும் வழிநடத்துவது சிறந்த சமுதாயத்தை உருவாக்கும்.





# மன்னிக்கும் தடவை

ஆண்டவர் இயேசுவிடம் அவருடைய சீடரான பேதுரு ஒரு நாள் கேட்டார்: "பிதாவே, என் உடன்பிறப்புகளான என் சகோதர, சகோதரிகளுள் யாரேனும் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்தால், எத்தனை முறை அவரை நான் மன்னிக்க வேண்டும்?"

இயேசு அதற்குப் பதிலாக ஓர் உவமைக் கதையைச் சொன்னார். அரசர் ஒருவர் தம் பணியாளர்களிடம் வரவு/செலவுக் கணக்குகளைப் பார்க்கக் கேட்டார். அவர்களும் அரசனின் ஆணைக்கு இணங்கிக் கணக்குகளைக் காண்பித்தனர்.

அப்போது அவரிடம் ஆயிரக்கணக்கில் கடன் வாங்கித் திருப்பித் தராமல் இருக்கும் ஒருவரைப் பற்றித் தெரியவந்தது. பணியாளர்கள் அவரை அரசனின் முன்பு கூட்டி வந்து நிறுத்தினர். ஆனால் அவனுக்குப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலை.

அரசர், அவன் உடைமைப் பொருள்கள் அனைத்தையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார். கடன் தாரரான அந்த நபர் அரசனின் காலில் விழுந்து, "என்னைப் பொறுத்தருள வேண்டும். கூடிய விரைவில் எல்லாவற்றையும் திருப்பித் தந்து விடுகிறேன்" என வேண்டிக் கொண்டார். அவர் மேல் பரிவு கொண்டு அவனை விடுவித்து, அரசன் அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.

ஆனால் அரசனிடம் இருந்து விடுதலை அடைந்த அந்த நபர் வெளியே சென்றதும், அவனிடம் சிறு தொகையைக் கடனாகப் பெற்றிருந்த அவனது நண்பன் ஒருவரிடம், "என்னிடம் வாங்கிய கடனைத் திருப்பித் தா" எனக் கூறி அவரைப் பலவந்தமாகப் பிடித்துக் கழுத்தை நெரித்தான்.

உடனே கடன் வாங்கியிருந்த நண்பர் இவரது காலில் விழுந்து, "என்னைப் பொறுத்தருள வேண்டும். கூடிய விரைவில் எல்லாவற்றையும் திருப்பித் தந்து விடுகிறேன்" எனப் பணிவுடன் வேண்டினார். ஆனால் அவன் அதற்கு இசையவில்லை. தொடர்ந்து அவனுக்கு தொந்தரவு கொடுத்தான்.

இந்தச் சம்பவம், அரசரின் காதுகளுக்குப் போனது. அவர் உடனே தன்னிடம் கடன் பெற்ற அந்த நபரை உடனே பிடித்துவர ஆணையிட்டார். "நீ என்னை வேண்டியதால் உன் கடனை தள்ளுபடி செய்தேன். நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் நண்பருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும்தானே?" என்று கேட்டார். கோபம் கொண்ட அரசர், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைக் கூடத்தில் இருக்கும்படி ஆணையிட்டார். ஒருவன் தன் சகோதர, சகோதரிகளின் பாவங்களை மன்னிக்காவிட்டால் கடவுளும் அவனை மன்னிக்க மாட்டார்.

# சதியால் வீழ்த்தப்பட்ட வேங்கைகள்

■ நிலவன்



“நம்ப வைத்துக் கழுத்தறுத்தல்...” என்ற சொல்லாடல் நம் வழக்கில் உள்ளதுதான். அமைதிப் படை என்ற பெயரில் வந்து ஆக்கிரமிப்பு படையாக எம் மண்ணில் நிலைத்த இந்திய இராணுவம் செய்தததும் இதுதான்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதும் அமைதிப் படை என்ற பெயரில் 29.07.1987 எமது தேசத்துக்குள் நுழைந்தது இந்திய இராணுவம். பலாலி விமானத் தளத்தில் களமிறங்கிய இந்திய இராணுவத்தை வரவேற்றார்கள் நம் மக்கள். பெரும் ஆயுத வளத்துடன் வந்திறங்கிய இந்திய இராணுவம் நம் தேசத்தை விழுங்கிக் கொண்டு இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து இயங்க ஆரம்பித்தது.

அமைதிப் படை என்ற பெயரில் வந்தவர்கள் இலங்கை இராணுவத்துடன் சேர்ந்து அடாவடித்தனங்களில் ஈடுபட ஆரம்பித்தபோதுதான் மக்களுக்கு அவர்களின் உண்மை முகம் தெரிய ஆரம்பித்தது. 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து திலீபன் அண்ணா போராட்டத்தை முன்னெடுத்தபோது வேடிக்கை பார்த்த இந்தியா. அவர் ஈகைச்சாவு எய்தும்வரை வாளாவிருந்தது. இத்தருணத்தில் தான் ஈழத் தமிழர்களுக்கு இந்தியாவின் வன்ம முகம் வெளித் தெரிந்தது.

அமைதிப் படையாக வந்து எம் மக்கள் கொல்லப்பட்டபோதும், மக்கள் மதித்த போராளிகள் - தளபதிகள் வீரச்சாவடைந்த தருணங்களிலும்தான் அவர்களின் வருகையின் நோக்கம் அமைதி அல்ல அழிவு என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. எம் தேசத்தில் கால் பதித்து 3 மாதங்களில் விடுதலைப் புலிகளை அவர்களுக்கு எதிராக ஆயுதத்தை நீட்ட வைத்தது. இவ்வாறு ஆயுதத்தை நீட்ட வைத்த சம்பவம்தான் தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகளின் வீரமரணம்.

● ● ●

இந்தியாவின் மத்தியஸ்தத்தை தொடர்ந்து தலைவர் பிரபாகரன் யுத்த நிறுத்தத்துக்கு சம்மதித்தார். அமைதி வழித் தீர்வுக்காகப் பல விட்டுக் கொடுப்புகளை செய்திருந்தார். உச்சபட்ச விட்டுக் கொடுப்பாக விடுதலைப் புலிகள் தமது ஆயுதங்களை இந்தியாவிடம் வழங்கினர். தளபதிகள் மட்டும் பாதுகாப்புக்கு ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்றும் போராளிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்குவது என்றும் இலங்கை அரசால் அறிவிக்கப்பட்டது. ஆனால் இலங்கையும் இந்தியாவும் பல தகிடுதத்தங்களை ஆடின. அந்த தகிடுதத்தங்கள் பலனளிக்காது போகவே தலைவர் பிரபாகரனை மிரட்டிப் பணிய வைக்க இந்தியா முயன்றது.

அமைதி வழியில் தீர்வு காண சம்மதித்து - ஆயுதங்களை இந்தியப் படைகளிடம் ஒப்படைத்து தனது மக்களின், போராளிகளின் பாதுகாப்பையும் இந்தியாவிடமே தலைவர் பிரபாகரன் பாரப்படுத்தியிருந்தார். ஆனால் தனது பொறுப்பை - பாரம் ஏற்ற மக்களையோ, போராளிகளையோ இந்தியா பாதுகாக்கவில்லை. மாறாக இலங்கைப் படைகளுடன் சேர்ந்து தமிழ் மக்களுக்கு எதிராக அட்டூழியங்களை செய்ததுடன் போராளிகளுக்கு மரணத்தையும் ஏற்படுத்தியது.

மக்கள் நேசித்த - மக்களை நேசிசத்த தளபதிகள் திலீபன், குமரப்பா, புலேந்திரன் போன்றவர்களுடன் பல போராளிகள் இந்த மூன்று மாத காலப்பகுதியில் அநியாயமாக மரணமானார்கள். மக்களின் பேரபிமானத்தைப் பெற்றிருந்த புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தியாகி லெப்.கேணல் திலீபன் ஈகச் சாவு எய்தியபோது மக்களிடையே பெரும் இந்திய எதிர்ப்பலை உருவாகியது. ஆயுதப் வழிப் போராட்டமே பிரச்சினைத் தீர்வுக்கு ஒரே வழி என தமிழ் மக்களும் போராளிகளும் நம்பினர். ஆனால், தமிழரின் தலைமை பொறுமை காத்தது. அந்தப் பொறுமைக்கு கிடைத்த பலன் மீண்டும் ஓர் இழப்பு - ஈடு செய்ய முடியாத பேரிழப்பு.

அமைதி திரும்பியிருந்த காலத்தில் மீண்டும் இந்தியாவுக்கு செல்வதில்லை எனத் தலைவர் பிரபாகரன் தீர்மானித்திருந்தார். எனவே தமிழகத்தின் அலுவலகத்தில் இருந்த பொருட்களை இங்கேயே கொண்டுவர புலிகள் நடவடிக்கை எடுத்தனர். யாழ். மாவட்டத் தளபதி குமரப்பா, திருகோணமலை மாவட்டத் தளபதி புலேந்திரன் ஆகியோர் தலைமையிலான 17 பேர் கொண்ட அணியை ஏற்றிக் கொண்டு கடற்புறா படகு 03.10.1987 அன்று பயணமாகியிருந்தது.

இவர்களின் பயணம் குறித்து ஏற்கனவே இந்தியப் படையினருக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது. தமிழகத்தில் இருந்து பொருட்களை கொண்டுவந்து இறக்கி விட்டு மீண்டும் தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த படகை இலங்கை இராணுவத்தினர் வழிமறித்தனர். படகிலிருந்த அனைவரும் கைது செய்யப்பட்டனர். சமாதான ஒப்பந்தம் நடைமுறையில் இருப்பதால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனத் தளபதிகளும் புலிகளும் நம்பினர். ஆனால் பிடிபட்ட தளபதிகளை வைத்து பேரம்பேச முனைந்தது இலங்கை அரசு.

● ● ●

புலிகளுடனான போரில் கைதான இலங்கை இராணுவத்தினர் விடுவிக்கப்பட வேண்டும்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் விருப்பின்படி இடைக்கால நிர்வாக சபையை ஏற்க வேண்டும் என்பனவே தளபதிக்ளின் விடுதலைக்கான பேரமாக இலங்கை அரசு முன்வைத்தது. இந்தப் பேரத்துக்கு இந்திய அரசாங்கம் மத்தியஸ்தம் வகிக்க முனைந்தது.


போர் முனையில் கைது
இராணுவத்தையும் சமாதா
காலத்தில் கைது செய்யப்ப
எம்மையும் ஒப்பிட முடியா
கூறிய தளபதி புலேந்திரன்
இலட்சியத்திற்காகப் போர
எம்மை வைத்து இடைக்கா
சபை குறித்துப் பேரம் பேசு
ஏற்றுக் கொள்ள முடியாது
திட்டவட்டமாகத் தெரிவி

இந்தப் பேரப் பேச்சை த
பிரபாகரனும் விரும்பவில்
தளபதிகள் விடுவிக்கப்பட
என அவரின் செய்தியை இ
பிரதமருக்குக் கொண்டு செ
மகேந்திரராசாவை(மாத்தை
அழைத்துக் கொண்டார்.

அப்போதைய இந்தியத்
டிக்சிற் புலிகளைப் பணிய
ம்யன்று தோற்றார். விடுவி
என்ற நம்பிக்கையில் இருந்
அந்த நேரம் செல்லச் செல்
நம்பிக்கையை இழந்தனர்.
இருந்து தளபதிகளை கொ
கொண்டு செல்ல நடவடிக்
எடுக்கப்பட்டது. சயனைற்
விடுவார்கள் என்பதால் ஏற்
அவர்களிடம் இருந்து சய
அகற்றப்பட்டிருந்தன.

தமது இறுதி முடிவு பற்







ில் கைது செய்யப்பட்ட
ம் சமாதான
செய்யப்பட்ட
ட முடியாது. எனக்
லேந்திரன் 'தமிழீழ
கப் போராடும்
இடைக்கால நிர்வாக
பரம் பேசுவதனை
முடியாது" எனத்
த் தெரிவித்தார்.
பேச்சை தலைவர்
ரும்பவில்லை.
ிக்கப்பட வேண்டும்
ப்தியை இந்தியப்
ாண்டு சென்ற
வ(மாத்தையா) திருப்பி
ண்டார்.
இந்தியத் தூதுவர்
ப் பணிய வைக்க
ார். விடுவிக்கப்படுவர்
ில் இருந்த தளபதிகள்
லச் செல்ல அந்த
ழந்தனர். பலாலியில்
ளை கொழும்புக்கு
நடவடிக்கை
சயனைற் உட்கொண்டு
பதால் ஏற்கனவே
ருந்து சயனைற்கள்
ந்தன.
முடிவு பற்றி

தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் ஏனைய 10 மூத்த போராளிகளும் தலைவர் பிரபாகரனுக்கு எழுதினர். தலைவர் பிரபாகரன் தான் அணிந்திருந்த சயனைற்றுடன் 17 சயனைற்களை அனுப்பி வைத்தார். 05.10.1987 காலை 10 மணிக்கு தளபதிகளும் போராளிகளும் விடுவிக்கப்படுவர் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நிறைவேறவில்லை. நேரம் தள்ளிப் போன நிலையில் கொழும்புக்கு தளபதிகளை ஏற்றத் தயாரான நேரத்தில் மாலை 5 மணியளவில் சயனைற் குப்பிகளை தளபதிகளும் போராளிகளும் கடித்தனர்.

லெப்.கேணல் குமரப்பா, லெப். கேணல் புலேந்திரன், மேஜர் அப்துல்லா, கப்டன் கரன், கப்டன் பழனி, கப்டன் நளன், கப்டன் மிரேஸ், லெப். அன்பழகன், லெப். தவக்குமார், 2 ஆம் லெப். ஆனந்தகுமார், 2 ஆம் லெப். றெஜினோல்ட் ஆகிய பதினொருவரும் உடன் வீரச்சாவை தழுவிக் கொண்டனர். மருத்துவ சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்ட ஏனையவர்களுள் கப்டன் ரகு மறுநாள் வீரச்சாவடைந்தார். ஏனைய 5 பேரும் சித்ரவதைகளுக்கு உள்ளாகி சில மாதங்களின் பின் விடுதலையாகினர்.

மரணமான தளபதிகள் - போராளிகள் வித்துடல்கள் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. 07.10.1987 தீருவிலில் (பின்னாளில் குமரப்பா - புலேந்திரன் நினைவுத்தூபி அமைந்த இடம்) மக்கள் வணக்கத்துக்காக வித்துடல்கள் வைக்கப்பட்டன. அடக்குமுறைகளை மீறி ஏராளமான பொதுமக்கள் தளபதிகளின் இறுதி நிகழ்வில் பங்கேற்றனர். தலைவர் பிரபாகரன் ஆயுதங்களுடன் வந்து இறுதி அஞ்சலி செலுத்தினார். ஈற்றில் அவ்விடத்திலேயே பன்னிரு வேங்கைகளின் உடல்களும் தீயுடன் சங்கமமாகின. (அக்காலத்தில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வீரர்களை விதைக்கும் முறை இருக்கவில்லை)

● ● ●

தமது அன்புத் தளபதிகளின் இறப்பைத் தொடரந்து புலிகள் ஆயுதப் போரைத் தொடங்கினர். 10.05.1987 அன்று இந்திய இராணுவத்துக்கு எதிராகப் போர் தொடங்கியது. இறுதியில் புலிகளின் தாக்குதலை சமாளிக்க மாட்டமல் திணறி சர்வதேசத்தில் தனக்கு ஏற்பட்ட அவப்பெயர் மேலும் ஏற்படாமல் தடுக்கவும் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட சூழலிலும் இந்தியப் படைகள் வெளியேறியிருந்தன. 1,155 படையினர் இறந்ததுடன் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தும் இருந்தனர்.

●





## லெப்.கேணல் குமரப்பா

இரட்ணபாலன் என்ற இயற்பெயர் கொண்ட இவர் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர். பாலசுந்தரம் - சிவகாமலட்சுமி தம்பதியருக்கு 27.05.1957 அன்று பிறந்தார். வல்வெட்டித்துறை றோ.க.த.க. பாடசாலை, வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் உயர் கல்வி பயின்றார்.

1983 ஆம் ஆண்டு போராளியாக இணைந்தவருக்கு 1984 இல் பொலிகண்டியில் தரையிறங்க முனைந்த படையினருடனான மோதலே முதல் களம். பருத்தித்துறை பொலிஸ் நிலையத் தாக்குதல், கொக்கிளாய் முகாம், யாழ். பொலிஸ் நிலையம் (1985), மன்னார் பொலிஸ் நிலையம், குச்சவெளி பொலிஸ் நிலையம், வாகரை இராணுவ முகாம், ஏறாவூர் பொலிஸ் நிலையம், மாங்கேணி இராணுவ முகாம் தாக்குதல்களில் பங்கேற்றிருந்தார்.

மட்டு. - அம்பாறை தளபதியாக பொறுப்பு வகித்த இவர் பின்னர் யாழ். மாவட்டத் தளபதி யாக நியமிக்கப்பட்டார். வீரச்சாவுக்கு ஒரு மாதம் முன்பாகவே 04.09.1987 அன்று ரஜினி என்பவரை மணந்து திருமண வாழ்வில் இணைந்தார்.

இவர்களைப் போன்றே கப்டன் கரனும் திருண மான இரு பிள்ளைகளின் தந்தை. புலிகளின் விமானப் படைத் தளபதியாக இருந்த கேணல் சங்கர் என அறியப்பட்ட வைத்திலிங்கம் சொர்ண லிங்கம், லெப். சித்தார்த்தன் என அறியப்பட்ட வசீகரன் (லெப்.கேணல். பொன்னம்மானுடன் வெடி விபத்தில் வீரச் சாவடைந்தவர்) இருவரும் இவரின் சகோதரர்கள்.

## லெப். கேணல் புலேந்திரன்

தர்மராசா என்ற இயற்பெயரைக் கொண்ட இவர் திருகோணமலை பாலையூற்றைச் சேர்ந்தவர்.

குணநாயகம் - சுந்தரம்மா தம்பதியருக்கு 07.06.1961 அன்று மகனாகப் பிறந்தவர். 1979 ஜன வரி மாதம் போராளியாகத் தன்னை இணைத்துக்கொண்டார்.

இலங்கை இராணுவத்துக்கு எதிராக காங்கேசன்துறையில் 1981 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தாக்குதல், சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், பருத்தித் துறையில் பொலிஸ் மீதான தாக்குதல், கந்தர்மடம் தேர்தல் சாவடி மீதான தாக்குதல், திருநெல்வேலியில் இராணுவம் மீதான தாக்குதல், சிறீபுர சந்தி, அச்சுவேலி முற்றுகை, முள்ளிப் பொத்தானை இராணுவ முகாம், பன்மதவாச்சி தாக்குதல்களில் பங்கெடுத்தவர்.

விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினராகவும் திருகோணமலை மாவட்டத் தளபதியாகவும் இவர் செயற்பட்டிருந்தார். வீரச்சாவடைய மூன்று மாதங்களுக்கு முன்னரே சுபாசினி என்பவரை திருமணம் செய்து கொண்டார். வீரச்சாவடைந்த சமயம் அவரது மனைவி கர்ப்பமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தளபதி புலேந்திரன் போர் களத்தில் எப்போதும் இலங்கை இராணுவத்திற்கு சிம்மசொப்பனமாக இருந்தார். இறுக்கமான கட்டுப்பாடு - ஒழுக்கத்தைக் கொண்டிருந்த இவர் மீது இராணுவத்தினர் தீராத பகையுணர்வு கொண்டிருந்தனர். தமது பகையை புலேந்திரனின் வீரச்சாவின் பின் அவரின் வீர உடலத்தின் மீது வெளிப்படுத்திருந்தனர்.

சந்திரவதனா

# அம்மாவின் தேவைகள்

அம்மா திரும்பத் திரும்ப பலதடவைகள் தொலைபேசியில் என்னை அழைத்து விட்டா. ஒவ்வொரு முறை கதைக்கும் போதும் பத்துத் தடவைகளுக்கு மேலாக 'எப்பவடா வருவாய்?' என்று கேட்டு விட்டா.

போன மாசம்தான் போயிட்டு வந்தனான். எப்போதும் இப்படித்தான். ஒன்றரை மணித்தியால ஓட்டம். போய் சில மணிநேரங்கள் நின்று வருவேன். திரும்பிய அடுத்த நாளே தொலைபேசி கிணுகிணுக்கும். 'எப்பவடா வருவாய்?' என்றுதான் கதைகக்கத் தொடங்குவா.

உணவக வேலை. கிழமையில் ஒரு நாள்தான் விடுப்பு. அந்த ஒரு நாளும் அம்மாவிடம் வெளிக்கிட்டால் வீட்டில் பிரச்சினை. மனுசி மூஞ்சையைத் தூக்கி வைச்சுக் கொண்டிருப்பாள்.

போகப்போறேன் என்றதும், அவள் செய்கைகள் எல்லாம் மாறிவிடும். தேத்தண்ணியை மேசையில் 'டொங் என்று வைப்பாள். கதவைச் சாத்தும் போது ஒரு வித வேகத்துடன் சாத்தி பெருமொலி எழுப்புவாள். குசினிக்குள் பாத்திரங்களை உடைக்காத் குறையாய் உருட்டுவாள்.

'உனக்கென்ன, உன்ரை அம்மாவை ஜேர்மனியிலை கூட்டிக் கொண்டு வந்து வைச்சுக் கொண்டாடிக் கொண்டிரு" என்பாள். பார்வையால் எரிச்சலைத் தெளிப்பாள்.

அவளது அம்மா ஊரில். லிபரா கார்ட்டை வேண்டி வேண்டி கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் கதைப்பாள்.

எனது அம்மாவை நேரே கண்டால் 'மாமி, மாமி" என்று குழைவாள். சிரித்துச் சிரித்துக் கதைப்பாள். அன்போடு வினவுவாள். அக்கறையாகக் கவனிப்பாள். எனது அக்கறை அம்மாமீது என்றால்தான் அவளுக்குப் பிடிக்காது. வெடிப்பாள்.

அம்மா தங்கைச்சியோடுதான் இருந்தவ. தங்கைச்சி வீடு கொஞ்சம் கிட்டத்தான். அங்கென்றால் அடிக்கடி போகக் கூடியதாக இருந்தது. தங்கைச்சி திடீரென்று ஆறு மாத விடுப்பு எடுத்துக் கொண்டு, மகளுக்கு ஏதோ படிப்பு என்று இந்தியாவுக்குப் போய் விட்டாள். அம்மாவைக் கொண்டு போய் தன்ரை மகன் வீட்டிலை விட்டிட்டாள். 'லிப்ற் இல்லாத எனது வீட்டில் அம்மாவால் படி ஏற ஏலாது" என்று அவளே எல்லாம் தீர்மானித்தும் விட்டாள்.

அம்மா தள்ளி இருக்கும் போதே இப்படி வெடிக்கும் எனது மனைவி, வீட்டுக்கே கூட்டிக் கொண்டு வந்து விட்டால் என்ன சன்னதம் ஆடுவாளோ என்ற பயத்தில் நானும் ஒன்றும் வற்புறுத்தவில்லை. அது ஒரு குற்றமாய் இப்போதும் எனக்குள் குறுகுறுத்துக் கொண்டேயிருக்கிறது.



தங்கைச்சியின் மகன் வீடு வசதியானதுதான். மருமகளும் நன்றாகக் கவனிப்பாள். எனக்குத் தான் தூரமாப் போய் விட்டது.

இருந்தாலும் என்ன செய்வது? ஒருவாறு புறப்பட்டாயிற்று. அதிவேக வீதி. ஒருவித ஒழுங்குடன் வாகனங்கள் ஓடிக்கொண்டிருந்தன. காருக்குள் தமிழ்ப்பாட்டு. மனதுக்குள் என்னைக் கண்டதும் மகிழப்போகும் அம்மாவின் முகம். அதற்கு மேலால் எனது மனைவியின் செய்கைகளால் கவிந்து போன ஒரு துயர்.

எல்லோரையும் ஒரே பொழுதில் திருப்திப்படுத்தி விட முடிவதில்லைத்தானே. மனம் கொஞ்சம் கொஞ்சமாகப் பாடல்களுடன் லயிக்கத் தொடங்கி, சோகமும், மகிழ்வும் என்று மாறி மாறிக் கனிந்தும், கசிந்தும் வேறொரு ஏகாந்தத்தில் பயணித்தது.

அம்மா என் வரவை எதிர்ப் பார்த்திருந்ததில் சாப்பிடாமல் காத்திருந்தா. என்னைக் கண்டதும் எத்தனையோ வருடங்களின் பின் காண்பது போல குழந்தைத்தனமாகக் குதூகலித்தா.

ஒரு பொழுதில் ஓடி ஓடி வீட்டில் உள்ள அத்தனை சுமைகளையும் சுமந்த அம்மா தன்னையே சுமக்க முடியாமல் தள்ளாடினா. சோபாவில் இருந்து கையை ஊன்றி எழும்பும்போது தடுமாறி மீண்டும் தொப்பென சோபாவில் விழுந்தா. மீண்டும் பிரயத்தனப்பட்டு எழும்பினா. நான் கையைப் பிடித்துக் கூட்டிக் கொண்டு வந்து சாப்பாட்டு மேசையடியில் உட்கார வைத்தேன்.

மருமகள் சுவையாகச் சமைத்திருந்தாள். முருங்கைக் காய்ப் பிரட்டல். கத்தரிக்காய் பொரித்துச் சம்பல். வெட்டிக்காய் வதக்கல் குழம்பு. அம்மாவுக்கு மச்சத்தை விடச் சைவம் பிடிக்கும் என்று பார்த்துப் பார்த்துச் சமைத்திருந்தாள். நானும் சாப்பிட்டேன்.

ஆனாலும் ஏதோ ஒன்று என்னை அங்கு அந்நியப்பட்டவன் போலவே உணர்த்திக் கொண்டிருந்தது. என் அம்மா எனக்குச் சொந்தமில்லாதவள் போலவும் அவளுக்குத்தான் சொந்தமானவள் போலவும் இருந்தது மருமகளின் செய்கை.

அம்மா தட்டுத்தடுமாறி எழுந்து, கைகழுவ குசினியை நோக்கி நடந்த போது, கால் தடுக்கி விடுவாள் போலிருந்ததால், நான் பயந்து 'கால் தடுக்கி விடுவாய்' என்றேன்.

மருமகள் உடனே 'நான்தானே அவவை ஒவ்வொரு நாளும் பார்க்கிறன்" என வெடுக்கெனச் சொன்னாள்.

'நான்தானே உன் அம்மாவைப் பராமரிக்கிறேன். நீயென்ன, இப்போ வந்து விட்டு கவனம் பார்க்கிறாய். பேசாமல் இரு" என்பது போலிருந்தது அவளது பேச்சு.

அவளது பார்வைகளிலும், செயல்களிலும் அலட்சியம் பொங்கி வழிந்து கொண்டேயிருந்தது. நான் அந்நியப்பட்டவன் போல உணர்ந்தேன். அவளது திமிர் என்னை 'போய்விடு" என்று சொல்லாமல் சொல்வது போலிருந்தது.

அம்மாவுக்கு அவள் எல்லாப் பணிவிடைகளையும் செய்து கொண்டிருந்தாள். அம்மாவும் அவளது பணிவிடைகள் பற்றி மீண்டும் மீண்டுமாய் புகழ்ந்து சொல்லிக் கொண்டேயிருந்தாள்.

இனி நான் அங்கு போக வேண்டிய அவசியம் இல்லையென நினைத்துக் கொண்டேன். புறப்படும் போது 'அம்மா, நான் இனி இப்போதைக்கு இங்கை வரமாட்டன்" என்றேன்.

அம்மா, சுளீரென்று யாரோ தன்னைச் சாட்டையால் அடித்தது போலத் துடித்துத் திடுக்கிட்டாள்.

வழி நெடுகிலும் அந்தத் திடுக்கிடல் என்னை வருத்தியது. யார் என்னை அலட்சியப்படுத்தினால் என்ன? அம்மாவுக்கு என் வரவு பிடிக்கிறது. தேவைப்படுகிறது. நாளைக்கே போன் பண்ணி 'எப்பவடா வருவாய்?" என்று கேட்பா.

# இராட்சத மணி

5 தொன் எடைகொண்ட இராட்சத மணியைக் கற்பனை செய்து பாருங்கள்.. போலந்தின் தலைநகரான வார்சோவில் உலகின் மிகப் பெரிய ஆலய மணிகளில் ஒன்றின் வார்ப்பு நிறைவாகி இருக்கிறது.

பிரேசில் நகரில் யாத்திரீகர்கள் அதிகமாகக் கூடும் ஒரு முக்கிய ஸ்தலத்தின் தேவாலயத்திற்காகச் செய்யப்பட்டுள்ளது. இதன் உயரம் 4 மீற்றர். இதன் விட்டம் 4.5மீற்றர். செம்பும் தகரத்தாலுமே வார்த்தெடுக்கப்பட்டுள்ளது. இந்த மணி 100 மீற்றர் உயரமான ஒரு கோபுரத்தின் உச்சிக்கு செல்லப் போகின்றது.

இந்த மணியை கச்சிதமாக வார்த்து, அடிப்பதை பரிசோதித்து முடிய முழுமையாக 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. முதற் தடவை வார்ப்பின்போது, ஆங்காங்கே வெடிப்புகள் ஏற்பட்டதாகவும், இரண்டாவது முயற்சியில்தான் முழுமையான வெற்றியைச் சந்தித்தோம் என்கிறார்கள் இதை உருவாக்கியவர்கள். சுமாராக ஒரு வருட காலம் எடுக்கக் கூடிய பிரேசிலை நோக்கிய மணியின் பயணந்தான் கொஞ்சம் சிக்கலானது என்கிறார்கள் இவர்கள்.

சரி இது பிரமாண்டங்களில் ஒன்று என்றால் உலகின் அதி பிரம்மாண்டமான ஆலய மணி எது? மொஸ்கோவில் ஒரு துண்டு உடைந்த நிலையில் இருக்கும் "ஜார் மணி"தான் மிகப் பெரியது. இந்த உடைந்த துண்டின் எடை மட்டும் 11.5 தொன். இதன் உயரம் 6.14 மீற்றர் . அதன் விட்டம் 6.6 மீற்றர். இந்த மணியை 200 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் ஒன்றிணைந்து வடிவமைத்தனர். 1737 ஆண்டு ஏற்பட்ட மிகப்பெரிய தீ விபத்தால் இம்மணியில் ஒரு துண்டு உடைந்தது. இதனால் இந்த மணி ஒலிப்பதில்லை.

அடேங்கப்பா... வல்லவனுக்கு வல்லவன்!





# எருமைகள் முதல் கார் வரை

அரச கஜானாவைச் சுரண்டுவது எப்படி என்று, பாகிஸ்தான் அரசியல்வாதிகளிடமும் கற்றுக் கொள்ளலாம் போலிருக்கின்றது. ஆட்சிப்பீடத்தில் புதிதாக ஏறியிருக்கும் இம்ரான் கான், அங்குள்ள கோலத்தைக் கண்டு அதிர்ந்து போயிருக்கிறார். மகிந்த ஆட்சியில் நடந்த திருவிளையாடல்கள் போல, மக்களின் பணம் அப்போதைய அரசியல்வாதிகளிடையே ஆறாகப் புரண்டிருப்பதைக் கண்டு, மருண்டு போயிருக்கிறார்.

ஆடம்பர வாகனங்கள் ஒன்றல்ல இரண்டல்ல மொத்தம் 102, (இதில் பல குண்டு துளைக்காதவை), வானூர்திகள் நான்கு என்று நீளும் பட்டியலோடு 8 எருமைகளும் கணக்கில் சேர்கின்றன. எருமைப் பால் குடித்து முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தன்னை வளர்த்துக்கொண்ருக்கிறார் போலும். அரச கஜானா வழித்துத் துடைத்து எடுக்கப்பட்டு, கடன் பளுவால் பாகிஸ்தான் கூனிக்குறுகிக் கொண்டிருக்கும்போதுதான், முன்னாள் கிரிக்கட் வீரர் இம்ரான், ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்.

ஆட்சி நடத்த பணம் வேண்டாமா? முதல் கட்டமாக இந்த 8 எருமைகள், 34 வாகனங்களை ஏலத்தில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. மேலும் பல ஆடம்பர வாகனங்கள், ஏலத்தில் விடப்பட்டு அதி உச்ச கோரிக்கையாளருக்கு வாகனம் விற்கப்படும். அடுத்து 4 உலங்கு வானூர்திகள்.



இப்படியாக இங்குள்ள அனைத்து ஆடம்பரங்களையும் பணமாக்குவதுதான் இம்ரானின் குறி. பாகிஸ்தானின் கடன்சுமை பெரிதாக இருக்கிறது. இது பில்லியன்களையும் தாண்டி ட்ரில்லியனுக்குத் தாவி விட்டது. இருப்பதை விற்று, இருப்போரிடம் இரந்து, தள்ளாடும் பொருளாதாரத்தை தலை நிமிர்த்த வேண்டும்.

எருமைகள் தொடக்கம் அழகான கார்கள் வரை விற்று வரும் பணம் அரசைப் பொறுத்த மட்டில் யானைப் பசிக்கு சோளப் பொரிதான்.

# சாப்பாட்டு இராமனுக்கு இடமில்லை

வெளிநாடுகளில் சில உணவகங்கள், ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி விட்டு, நீங்கள் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடுங்கள் என்று சுதந்திரமாக விட்டு விடுகின்றன. அதாவது சாப்பிட "நோ லிமிட்".

ஜேர்மனியிலும் ஓர் உணவகம் 15.90 யூரோ (சுமாராக 3,200 ரூபா) கட்டிவிட்டு எவ்வளவும் சாப்பிடலாம் என்று அனுமதித்தது. (இது அங்கு பெரிய தொகையல்ல. நன்றாக சாப்பிடுவதானால் வெளியில் இதை விட இரு மடங்கு பணம் தேவை.)

இந்த உணவகத்தில் சாப்பிட ஒருவருக்குத் தடை விதிக்கப்பட்டதுதான் புதினம். ஜப்பானின் பச்சை மீன் உணவான "சுசி" என்ற உணவுப் பிரியர் இவர். ஒரு பிளேட்டின் விலை இங்கு அதிகம். இவர் சுமாராக 100 பிளேட் சாப்பிட்டார் என்கிறார்கள் உணவக ஊழியர்கள். ஐவர் சாப்பிடுவதை கட்டுமஸ்தான உடல் கொண்ட இவர் ஒருவரே சாப்பிட்டு முடிப்பார் என்கிறார்கள்.

ஒரு காலத்தில் ஆணழகன் போட்டிகளில் பங்குபற்றியவர் இப்போது கணனிப் பொறியியலாளர். 20 மணி நேரம் எதுவுமே சாப்பிடாமல் இருந்துவிட்டு, இங்கு வந்து தன் வயிறு நிரம்பும்வரை சாப்பிடுவாராம். இப்படி இவர் வந்து போனால், கடையை இழுத்து மூடவேண்டும் என்ற பயத்தால் அவருக்குத் தடை போட்டுவிட்டாராம் புத்திசாலி முதலாளி!

# அச்சம் இல்லை நட்பு

அவருக்கு வயது 67. பிறப்பால் பிரான்ஸ் நாட்டவர். இவரது நெருங்கிய நண்பர்கள் யாரென்று அறிந்தால், அதிர்ந்து போய் விடுவீர்கள். படுக்கை அறையில் முதலைகள், தேநீர் மேசையருகே சுருண்டு கிடக்கும் நாகம், சிலந்தி, ஓணான் என இப்படி நீள்கின்றது இவரின் நண்பர்கள் பட்டியல்.

400 வரையிலான வெவ்வெறு செல்லப் பிராணிகள் வீட்டுக்குள்ளும் வெளியிலும் வலம் வருகின்றன. பொதுவாகத் தன்னிடமுள்ள எல்லாப் பிராணிகளுமே தனக்கு அன்பளிப்பாகக் கிடைத்தவை அல்லது அநாதரவாக விடப்பட்டவை என்கிறார் இவர். முதலைத் தோல் பண்ணையொன்றில் இருந்து மீட்கப்பட்டது.

படுக்கையறையில் இருக்கும், அலி, கேட்டர் என்ற பெயர்கள் கொண்ட இரு முதலைகள். படுக்கையறையில் முதலைகளா? கற்பனை செய்து பார்க்கவே சங்கடமாக இருக்கும்போது, இவற்றோடு படுத்துறங்கும் இந்த மனிதர் அசாதாரமானவர்தான்.

இவரது அயலவர்கள் இது பற்றி முகம் சுழிப்பதில்லையாம். அடிக்கடி விருந்தினர்களாக வந்து கோப்பி அருந்தி, அவரின் நண்பர்களைப் பார்த்துச் செலகிறார்களாம். எது எப்படியோ தீயணைப்புப் படையினருக்கு கண்டிப்பான உத்தரவு என்ன தெரியுமா? வீட்டில் தீ பரவி விட்டால், உங்கள் இஷ்டத்திற்கு இவரின் வீட்டு அறைகளுள் புகுந்து விடாதீர்கள் என்பதுதான் அது.

உஷாரான மேலதிகாரிகள்தான்!



தொகுப்பு:
ஏ.ஜே.ஞானேந்திரன்

# வீரம் - காதல்

## சங்க இலக்கியத்தில் யானை





சங்க இலக்கியங்களில் மா, வேழம், கரி, சிந்தூரம், அத்தி, அருகு, ஆம்பல், அலுவல், இபம், இம்மடி, கைம்மா போன்ற 50ற்கும் அதிகமான பெயர்களில் அழைக்கப்படும் விலங்கு யானை. தமிழர்களில் வாழ்வியலோடு மிக நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கும் இந்த யானைகள். சங்கத்தமிழன், தான் இயற்றிய இலக்கியத்தில் எவ்வாறெல்லாம் குறிப்பிட்டிருக்கிறான் என்று பார்க்கலாம்.

**வீரமும் வெற்றியும் யானையினதே**

புதர் ஒன்றில் தனது கூட்டத்துடன் மேய்ந்து கொண்டிருந்த ஆண் யானை, நீர்நிலை ஒன்றில் பதுங்கியிருந்து தன்னைத் தாக்க வந்த புலியை தனது கூரிய தந்தத்தால் குத்தி கொன்று, தந்தத்தில் வழியும் குருதியை கொட்டும் மழை நீரில் கழுவி விட்டு மலைச்சரிவில் இறங்கி தனது கூட்டத்துடன் சேர்ந்து கொண்டது என்கிறது கபிலர் எழுதிய அகநானூ ற்றுப் பாடல் ஒன்று. புலியைக் கொல்லும் யானையை போரில் ஒருவன் கொல்கிறான், அதுவும் ஆயிரம் யானைகளைக் கொன்று குவிக்கிறான் என்றால் அவனைப் போற்றி பாடாமல் இருக்க முடியுமா? அப்படி அமைந்தது தான் பரணி.

மாபெரும் போரில், ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனை வாழ்த்திப் பாடுவதாக அமைகிறது பரணி இலக்கியம். ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான வீரர்களை வீழ்த்தும் யானைப் படையானது போரின் வெற்றி தோல்விகளை தீர்மானிக்கும் ஒன்றாகவே இருந்திருக்க வேண்டும். அதனாலேயே ஆயிரம் யானைகளைக் கொன்ற வீரனைச் சங்க இலக்கியம் போற்றிப் பாடுகிறது. இது ஒருபுறம் என்றால், இலங்கையின் வன்னியில், மதங் கொண்ட யானையை அடக்கிய 'அரியாத்தை' என்ற பெண்ணின் வரலாற்றைக் கூறும் "வேழம்படுத்த வீராங்கனை"என்னும் நாட்டுக்கூத்தை செல்லத்துரை என்பவர் எழுதினார். இப்படி யானையை அடக்குவதும், வதம் செய்வதும் வீரத்தின் அடையாளமாகவே தமிழர்கள் கருதினர்.

அதியமானின் யானைப்படைகளைக் கண்ட எதிரி நாட்டு மன்னன், தனது கோட்டை கதவுகளுக்கு வலிமையான புதிய கணையமரங்களைப் பொருத்தினர் என்று அவ்வையார் பாடல் ஒன்றின் மூலம் அறியமுடிகிறது.

**காதலும் யானையும்**

"வாரணம் ஆயிரம் சூழ வலஞ்செய்து
நாரணன் நம்பி நடக்கின்றான் என்று எதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புறம் எங்கும்
தோரணம் நாட்டக் கனாக் கண்டேன் தோழி நான்"

எனத் தன்னுடைய திருமணக் கனவைப் பற்றி நாச்சியார் திருமொழியில் கூறுகிறார் ஆண்டாள். அதாவது, திருமால், ஆயிரம் யானைகள் சூழ வருகிறார். அக்காட்சியைக் காணும் மக்கள், பாதையின் இரு புறமும் பொற்குடங்களை வைத்து, தோரங்கள் கட்டி வரவேற்பதாகக் கனவு கண்டதை தன் தோழியிடம் ஆண்டாள் கூறுவதாக அமைகிறது அப்பாடல்.

"நசைபெரிது உடையார் நல்கலும் நல்குவார்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின் தோழி! அவர் சென்ற
ஆறே" - குறுந்தொகை.

பிரிந்து சென்ற காதலன் விரைவில் வருவான் எனத் தோழி, தலைவியிடம் கூறுவதாக அமைந்திருக்கும் இப்பாடலில், தலைவன் சென்ற பாலை நிலத்தில், வலிமையான ஆண் யானை, மென்மையான கிளைகளை உடைத்து பெண் யானைக்குக் கொடுக்கும் காட்சி இருக்கும். அதனைப் பார்க்கும் தலைவன், விரைவில் வந்து சேர்வான் எனக் கவலையில் இருக்கும் தலைவிக்கு தோழி கூறுகிறாள். காதலிலும் யானை இன்றியமையாததாக உள்ளது என்பதை மேற்கண்ட இரு பாடல்களின் மூலம் நம்மால் அறிய முடிகிறது.


**யானையை விட மனிதர்களிடம் தள்ளி நிற்க வேண்டும் :**


"கொம்புளதற்கு ஐந்து குதிரைக்கு பத்துமுழம்
வெம்புகரிக்கு ஆயிரம்தான் வேண்டுமே – வம்புசெறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி"
- நீதி வெண்பா

இப்பாடலில், கொம்பிருக்கும் விலங்குகள் இருக்கிறது என்றால் அது இருக்கும் இடத்தில் இருந்து ஐந்து முழம் தள்ளி நிற்க வேண்டும். குதிரையாக இருந்தால் பத்து முழம் தள்ளி நிற்க வேண்டும், அதே யானையாக இருந்தால் ஆயிரம் முழம் தள்ளி நிற்க வேண்டும். அதே போல், தீயோரைக் கண்டால் கண் காணாத தூரத்திற்கு ஓடிவிடுங்கள் என்று கூறுகிறது இப்பாடல். மனிதர்களையும், அவர்களின் குணங்களையும் விளக்குவதற்காக யானையை ஒப்பிட்டு இந்த பாடலை எழுதியவர் யார் என்று தெரியவில்லை. ஆனால், மிகப்பெரிய விலங்கான யானையை விட ஆபத்தானவன் மனிதன் என்பதை இப்பாடல் மூலம் அறியலாம்.

சங்க இலக்கியங்களில் வீரத்திற்கும் காதலுக்கும், ஒழுக்கத்திற்கும் எடுத்துக்காட்டாகப் பயன் படுத்தப்பட்ட யானைகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். எண்ணிக்கையில் மிகவும் சுருங்கிவிட்ட யானை களில் வாழ்வியலையும் அதன் வாழிடத்தையும் காக்கும் கடமை நமக்கு உண்டு என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

# “உன் உடல் உன்னுடையது மட்டுமே”




**என்** 16ஆவது வயதில், லொஸ் ஏஞ்சலீஸ் புறநகர்ப் பகுதியில் உள்ள புவென்ட்டே ஹில்ஸ் சிறப்பு அங்காடியில சந்தித்த நபருடன் வெளியில் சுற்றத் தொடங்கினேன். பாடசாலை நேரத்துக்குப் பின்னர், அங்கு உள்ள றொபின்ஸன் மே பல்பொருள் அங்காடியில் பணிபுரிந்து வந்தேன். அவன் ஒரு உயர் ரக ஆடையகத்தில் பணிபுரிந்தான். சாம்பல் நிற சில்க் சூட் அணிந்து என்னைப் பார்க்கவரும் அவன், என்னிடம் சரசமாகப் பேசுவான். கல்லூரி மாணவன் அவன். அழகானவன், வசீகரமானவன். அப்போது அவனுக்கு வயது 23. நாங்கள் சந்தித்து, சேர்ந்து சுற்றத் தொடங்கி ஆறு மாதங்களே ஆன நிலையில், ஒரு புத்தாண்டு இரவில் அவன் என்னைப் பாலியல் பலாத்காரம் செய்தான்.

அமெரிக்க உச்ச நீதிமன்ற இணை நீதிபதியாகப் பரிந்துரைக் கப்பட்டிருக்கும் பிரெட் கேவனோவுக்கு எதிராக இரண்டு பெண்கள் குற்றம்சாட்டியிருக்கும் நிலையில், கடந்த சில நாட்களாக அந்தச் சம்பவத்தைப் பற்றித்தான் தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தேன். பிரெட் கேவனோவுடன் உயர்நிலைப் பள்ளியில் ஒன்றாகப் படித்தவரான கிறிஸ்டின் ப்ளேசி ஃபோர்ட், தனது வாயைப் பொத்தி, தன்னைப் பாலியல் வல்லுறவு செய்ய பிரெட் கேவனோவ் முயன்றதாகக் கூறியிருக்கிறார். கல்லூரியில் படித்தபோது, பிரெட் கேவனோவ் தன் முன்னே ஆடைகளைக் களைந்து நின்றதாக டெப்ரோஹா றொமிரேஸ் எனும் பெண் கூறியிருக்கிறார்.

கிறிஸ்டின் ப்ளேசி சொல்வது உண்மையென்றால், அவர் பல ஆண்டுகளுக்கு முன்பே பொலிஸில் முறைப்பாடு செய்திருக்க வேண்டும் என்று ருவிற் செய்திருக்கிறார் அதிபர் ட்ரம்ப். ஆனால், அந்த இரண்டு பெண்களும், பொலிஸூக்குச் செல்லாமல் பல ஆண்டுகளாக அந்தத் தகவலைத் தங்களுக்குள்ளேயே வைத்திருந்தது ஏன் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. பல ஆண்டுகளாக நானும் அப்படித்தான் இருந்தேன். பல ஆண்டுகளுக்கு முன்னர் எனக்கு என்ன நேர்ந்தது என்பதைப் பற்றி சமீபத்தில்தான் ருவிற் செய்திருந்தேன்.

நான் பாலியல் வல்லுறவுக்கு ஆளான இரவில் நான் மது அருந்தியிருந்திருப்பேன் என்று நீங்கள் நினைக்கலாம். அது ஒரு பொருட்டில்லை. ஆனால், நான் குடித்திருக்கவில்லை. நான் என்ன உடை அணிந்திருந்தேன் என்பதையோ, தெளிவில்லாத அபிலாஷைகளுடன் இருந்தேனா என்பதையோகூட நீங்கள் தெரிந்துகொள்ள விரும்பலாம். ஆனால், அதுவும் விசயமில்லை. நான் அன்று நீளமான கைவைத்த கறுப்பு நிற மக்ஸி அணிந்திருந்தேன். எனது தோள்கள் மட்டும்தான் வெளியில் தெரிந்தன.

அன்று இருவரும் சில விருந்துகளில் கலந்துகொண் டோம். அதன் பிறகு, அவனது வீட்டுக்குச் சென்றோம். பின்னர் நாங்கள் பேசிக்கொண்டி ருந்தபோது. மிகவும் களைப்பாக இருந்ததால், படுக்கையில் படுத்துத் தூங்கிவிட்டேன். அதன் பிறகு, என் கால்களுக்கு இடையில் கத்தியால் குத்தப்படுவதுபோல் உணர்ந்து நான் விழித்துக்கொண்டது நினைவிருக்கிறது. அவன் என் மீது படுத்திருந்தான்.

நான் அதை யாரிடமும் சொல்லவில்லை. என் தாயிடம், நண்பர்களிடம், குறிப்பாக பொலிஸிடம் நான் சொல்லவில்லை. முதலில் எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அன்று மாலை, நான் எப்போது வீட்டுக்கு வந்தேன் என்பதை என் தாயிடம் சொல்லிவிட்டு தூங்கிவிட்டேன் - அந்த இரவை மறக்க முடியும் என்ற நம்பிக்கையுடன். தவறு என்னுடையதுதான் என்பதை விரைவில் உணரத் தொடங்கினேன்.

1980-களில், ‘டேட்டிங்’ பாலியல் வல்லுறவு தொடர்பாகப் பெரிய அளவில் விழிப்புணர்வு இல்லை. பெரியவர்கள் என்ன சொல்வார்களோ என்று பயந்தேன்: “அவன் வீட்டில் என்ன இழவு செய்து கொண்டிருந்தாய்? உன்னைவிட அதிக வயதான ஒருவனுடன் ஏன் சுற்றினாய்?”

அது ஒரு பாலியல் வல்லுறவா? அல்லது பாலியல் உறவுதானா? என்றோகூட என்னால் பகுத்துப் பார்க்க முடியவில்லை. கட்டுப்பாடில்லாமல் நடந்த அந்த விசயம் குழப்பமாக இருந்தது. ஒருநாள் நான் உடலுறவு கொள்வேன் என்றால் அது காதலை வெளிப்படுத்தும் உறவாக இருக்கும், இன்பத்தைப் பகிர்ந்துகொள்வதாக இருக்கும் அல்லது குழந்தை பெற்றுக் கொள்வதற்கானதாக இருக்கும் என்பதுதான் என் மனதில் இருந்தது. ஆனால், அந்தச் சம்பவம் அப்படியானதாக இல்லை.

அந்தச் சம்பவத்துக்கு முன்னதா கவே நான் சில பாடங்களைக் கற்றுக்கொண்டுவிட்டேன் என்பதை, இன்று நினைத்துப் பார்க்கும்போது என்னால் உணர முடிகிறது. நான் ஏழு வயது சிறுமியாக இருந்தபோது என் வளர்ப்புத் தந்தையின் உறவினர் என் கால்களுக்கு இடையில் தொட்டார். தனது ஆண் குறியின் மீது எனது கையை வைத்தார். அதை என் தாயிடமும் வளர்ப்புத் தந்தையிடமும் சொன்னேன். சில நாட்களிலேயே அவர்கள் இந்தியாவுக்கு எனது தாத்தா, பாட்டியுடன் வசிக்க அனுப்பிவிட்டனர்.

கற்றுக்கொண்ட பாடம்: ‘வாயைத் திறந்தால், நீ ஒதுக்கிவைக்கப்படுவாய்!” இந்த அனுபவங்கள் என்னையும், எனது நம்பிக்கை கொள்ளும் திறனையும் பாதித்தன. என்னுடன் அன்யோன்யமாகப் பழகிய சிலரிடமும், ஒரு மனநல ஆலோசகரிடமும் அதைப் பற்றிப் பேச எனக்குப் பல ஆண்டுகள் பிடித்தன.

ஒரு ஆண் தனது பதின்ம வயதில் செய்த செயல்களுக்கு எந்த விலையும் கொடுக்க வேண்டியதில்லை என்பார்கள். ஆனால், பெண், தனது வாழ்நாள் முழுவதும் அதற்கான விலையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது - அவளை நேசிப்பவர்களும்தான்!


இன்றைக்கு எனக்கு ஒரு மகள் இருக்கிறாள். அவளுக்கு 8 வயது. புரிந்துகொள்வதற்கு எனக்கு மிக நீண்ட காலம் பிடித்த, எளிதான ஒரு விசயத்தை அவளுக்குத் தொடர்ந்து சொல்லிவருகிறேன்: “உனது அந்தரங்க உறுப்புகளில் யாரேனும் தொட்டாலோ உன்னை அசௌகரியமாக உணரவைத்தாலோ உரக்கக் கத்து. அந்த இடத்தைவிட்டு வெளியேறி யாரிடமாவது அதைச் சொல். உன் மீது கை வைக்க யாருக்கும் அனுமதி இல்லை. உன் உடல் உன்னுடையது மட்டும்தான்!”

18 வயது நிறைவதற்கு முன்னர், நான்கில் ஒரு பெண்ணும் ஆறில் ஒரு பையனும் பாலியல்ரீதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள். நமது மகள்கள் ஒருபோதும் அச்சத்தையும் அவமானத்தையும் உணராத வகையில், பெண்களின் உடல்கள் தங்கள் இச்சைக்கானவை அல்ல என்பதையும், பாலியல் துன்புறுத்தல்கள் கடுமையான விளைவுகளை ஏற்படுத்துபவை என்பதையும் நமது மகன்கள் புரிந்துகொள்ளும் வகையில், நாம் அனைவரும் போராட வேண்டும். அதற்காகத்தான் நான் இப்போது பேசுகிறேன். நம் தேசத்தின் உச்ச நீதிமன்றத்தில், முடிவுகளை எடுக்கும் ஒரு பதவிக்கு யாரை நியமிக்கிறோம் என்பதைத் தெளிவாகத் தீர்மானிக்கும் வகையில் அந்த சேதிகள் இருக்க வேண்டும்!


நன்றி : நியூயோர்க் ரைம்ஸ்


# அகிலனின் "அம்மை" அறிமுகவிழா

அம்மையினூடாக அகிலன் உலகத்தைப் பார்க்க எத்தனிக்கின்ற முயற்சியே வேறு. இது அவரின் மூன்றாவது நூல். அகிலனின் கவிதைகளில் நின்று உலகத்தைப் பார்ப்பதற்கும் உலகப் பெருவெளியில் நின்று அவரின் கவிதைகளைப் பார்ப்பதற்கும் இடையே அது பற்றிய பலவிதமான கருத்துக்களும், எண்ணங்களும் ஓடிக்கழிகின்றன.



எதை எது வென்று சொல்லுவது? ஒரு இலக்கியத்தின் மீது விமர்சனம் என்ற செயற் பாட்டோடு முரண்பட்டுக் கொள்பவன் யான் என்றவகையில் அகிலனின் அம்மை மீதான வாசிப்பும் அதனூடாகக் கொண்ட இவை அனைத்தும் எனது சொந்தக் கருத்துக்களேயன்றி வேறொன்றல்ல. அவரின் கவிதைகள் அவர் எழுதப்பட்ட நோக்கத்தையும் கடந்து எமக்குள் ஒரு முள்தைத்த வலியையும் ஏற்படுத்திவிடுவதன் மாயமென்ன? தாகத்திலிருப்பதால் தான் என்னவோ, அவற்றை சுவை அறியாது நாக்கு உள்வாங்குவதாக எண்ணுவது தவறு. தாகம் அடங்கிப் போய்விட்டவர்களிடமும் அவை வலியையும், வேதனையையும் ஏற்படுத்தி விடுகின்றன. கவிதைகளை வாசிக்கும்போது அவற்றினூடாகக் காட்சிகளும் ஓடிமறைகின்றன. பிறரிடமும் கேட்டேன். முள்ளிவாய்க்கால் நாட்களைக் கண்டறியாதவர்களும் அதையே சொன்னார்கள். அதை அனுபவித்த வர்களை விட, கவிதைகளை வாசிப்பவர்கள் கொண்ட அனுபவம் ஒருபடி அதிகம் என்பேன். அம்மையைப் படித்தபோது அங்கே அதிகம் முன்நின்றவர்கள் பெண்கள்.





அவர்களே அதிகம் பேசுகின்றனர். "அம்மை" என்ற தலைப்பு இதற்கு அதிகம் பொருத்தமான தொன்று. ஏனெனில் ஒரு சமூகத்தில், சுமையையும் அதனூடாக அனுபவிக்கின்ற வலியையும் அதிகம் உணர்பவள் பெண். அதனால் வலிகளையும் சுமைகளையும் நல்லவற்றையும் கெட்டவற்றையும் அவளே பேசவேண்டும் என்று அகிலன் எண்ணியிருக்கலாம். அதுவே எனது கருத்தென்றும் கொள்ளலாம். அனுபவம் பேசவேண்டும். அதுதான் நியாயமும் கூட. அதிலேதான் ஜீவன் இருக்கும். எனவே நியாயத்தை எடுத்துரைக்கின்ற அகிலனின் கவிதைகளில் ஜீவன் உண்டு.

பெருமழை மேவியுறைந்தது..  
நானற்றேன்.  
நீமட்டும் எஞ்சினாய்.  
நீதான் நானில்லை. இது  
என்றாய்.  
ஓர் குளிர் வீசியடங்கியது.  
நானுமில்லை நீயுமில்லை  
எனில்?  
தேகக்கோதுடைத்து திரண்ட  
எண்ணவெளி நின்றவன் யார்?

இது அம்மையிலுள்ள இறுதிக் கவிதை.

இறையின் அடியையும் முடியையும் தேடிய அவர்களாய்த்தான் நான்மாற வேண்டுமோ, இக்கவிதைகளின் பொருளை உணர? அம்மையை அடிஅடியாகப் படியுங்கள். அப்போதுதுபுரியும்.

கடந்தஞாயிறு 30.09.2018 அன்று நாவலர் வீதியிலுள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் அகிலனின் அம்மை என்ற கவிதைத் தொகுப்பின் அறிமுகவிழா நடைபெற்றது. கவிஞர் நிலாந்தன் தலைமையில் நடைபெற்ற விழாவில் விரிவுரையாளர் அருந்தாகரன் நூல் அறிமுக உரையை நிகழ்த்தினார். பிரபல இசையமைப்பாளர் கண்ணன் முதற்பிரதியைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து ரதிதரன், ஜோன்சன் ராஜ்குமார், கிருதர்ஷன் நிகலஸ், ஜோன் கலிஸ்ரஸ், மதிஷாழினி, சப்னா இக்பால் ஆகியோர் கவிதைகளின் ரசத்தைப்பேச நூலாசிரியர் பா.அகிலன் ஏற்புரையையும் நன்றிரையையும் வழங்கினார். ஒண்டரை மணித்தியாலத்திற்குள் நடைபெற்று முடிந்த இந்த விழாவினை, பல இளம் கவிஞர்கள் களம் கண்ட கவிதை வெளியீட்டு விழாவாகவும் கண்டோம்.

---

## குருவாக....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வின்போது ஒருவர் சுட்டிக்காட்டினார். வினா எழுப்பிய உடனேயே அவரா இவரா எனச் சிந்திக்காமல் மாணவரால் பதிலளிக்க முடிகிறது என்றால் அவர்களின் மனதில் இவர் எந்தளவுக்கு இடம்பிடித்துள்ளார் என்பதை விளக்கத் தேவையில்லை.

இதனால்தான் காரைக்குடி நகரில் றோட்டரிக் கழகத்தினால் இவர் நல்லாசிரியர் எனக் கௌரவிக்கப்பட்டார். சில நாட்களின்பின் நல்லாசிரியர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். காரைக்குடி நகரம் எங்கும் அவரது மாணவர்கள் பதாகை கட்டி வாழ்த்தி மகிழ்ந்தனர். இவ்விருதுக்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே 'எனது அப்பாவுக்குத்தான் இந்த விருது கிடைத்திருக்க வேண்டும். சூழ்நிலை சரியாக அமையவில்லை. அப்பாவுக்கு வழங்கப்பட்ட கௌரவமாக எண்ணி இதனை ஏற்கிறேன்" என்றார் இவர். எவ்வளவு தன்னடக்கமான வார்த்தைகள் இவை.

இன்னொரு சம்பவத்தையும் சுட்டிக்காட்டலாம். இரு மாணவர்களுக்கு இடையில் சண்டை. ஒருவன் மற்றவனுக்கு ஏதோ ஒன்றால் தாக்க பாரதூரமான காயம். அன்று தலைமை ஆசிரியரும் இல்லை. உதவித் தலைமையாசிரியரான இவர். தனது பணத்தைக் கொடுத்து காயமடைந்த மாணவனுக்கு மருந்து கட்டிய பின் வீட்டுக்கு அனுப்பி வைத்தார். தாக்கிய மாணவனை இரு நாட்களுக்குப் பாடசாலைக்கு வரவேண்டாம் எனச் சொல்லி அனுப்பி வைத்தார். அந்த மாணவனின் பெற்றோர் உடனே வந்தனர். தமது மகன் செய்தது தவறுதான் ஆனால் நீங்கள் அதற்காக பாடசாலைக்கு வரவேண்டாம் எனக் கூறியிருக்கத் தேவையில்லை என்றனர்.

உடனே இவர் ' அவனுக்குத் தண்டனையாக பாடசாலைக்கு வரவேண்டாம் எனக் கூறியதாக நீங்கள் நினைக்கிறீர்கள். அது தவறு காயமடைந்த மாணவனது மாமனோ வேறு எவரோ இவனைக் கண்டால் அடித்து விடுவார்கள். இரண்டு நாள் போனால் அவர்களது கோபம் ஆறிவிடும். ஏதாவது அசம்பாவிதம் நடந்துவிடக் கூடாதே என்பதற்காகவே நான் அவனை அனுப்பி வைத்தேனே தவிர வேறு எந்த நோக்கமும் இல்லை. நாங்களும் இந்த வயதைத் தாண்டி வந்தவர்கள்தானே?" என விளக்கமளித்தார்.

இன்றும் (ஓய்வு பெற்ற பின்பும்) பாடசாலை நிர்வாகம் கேட்டும் பணிகளைச் செய்து வருகின்றார். இவரது பிரியாவிடை வைபவத்தில் இவரிடம் பயின்று உயர்பதவிகளை வகிக்கும் அனேக பழைய மாணவர்கள் கலந்துகொண்டனர். காரைக்குடி நகரில் பல்வேறு மட்டப் பிரமுகர்களும் வருகை தந்திருந்தனர்.

வழிவழியாக ஆசிரியர்கள் அனேகர் குருவாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கௌரவத்தை வழங்க மாணவர் உலகு தயாராகவே இருக்கிறது.

## மண்டோ..

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரவலாக வாசிக்கப்பட்டு , கட்டுரைகள் எழுதப்பட்டு ஒரு எழுத்தாளனின் படைப்புகள் தமிழ்ச் சமூகத்தால் மரியாதையோடு அணுகப்பட்ட பெருமை குலாம் ஹசன் மண்டோவின் மகனான சதக் ஹசன் மண்டோவிற்கு உண்டு.

'சாத்தானை எப்போதும் பின் தொடந்து கொண்டிருக்கிறான் இவன்' என இறைவனுக்கு கடிதம் எழுதிய மண்டோவின் சொற்களே பெரும்பாலும் அவரது உரையாடலாக வருவதால் படத்தை மீண்டும் அவரது எழுத்துக்களாலே நிறைத்திருக்கும் நந்திதா தாஸின் ஈடுபாட்டுடன் கூடிய கடின உழைப்புக்கு நாம் தலைவணங்க வேண்டும்

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

படுத்தால் நித்திரை வரவேணும். அப்பிடி சனத்துக்கு மனமா வேலைசெய்ய வேணும். இது படுத்தால் ஒரு கண்ணுக்கு நித்திரை இல்லையாம் மஹிந்தாக்கு. அங்காலையும், இஞ்சாலையும் பிரண்டு பிரண்டு படுத்தாலும் ஒரு கண் நித்திரை இல்லையாம். காலமையிலைதான் ஒருகண் அயரப்போகேக்கை பன்சல மணி அடிச்சு ஆளை எழுப்பிப் போடுது. எப்பவும் ஐ.நாவும் ஜெனீவாவும் கண்ணுக்கை வந்தபடியாம். நினைக்கப் பயமாக்கிடக்கு. உவன் ரணிலை நினைக்க. கிறுக்கன் மூளைமாறிச்சாறினால் பிடிச்சுக் குடுத்திடுவன். என்னை வேண்டாம். என்ரை சகோரத்தை அல்லது பெடி பெட்டையளை. இல்லாட்டி மனுசியைப் பிடிச்சுப் போட்டிட்டினம் எண்டால்..? எவ்வளவு மானக்கேடும் வில்லங்கமும். நினைக்க வாற நித்திரையும் வருகுதில்லை. எண்டு மஹிந்தா நித்திரையிலை ஒரே புசத்தினபடியாம்.

இப்ப இருக்கிற ஆட்சி சரியில்லை. இந்த ஆக்களும் சரி இல்லை. அதிலை பொருளாதாரம் விழுந்து கொண்டு போகுது. நாங்கள் இருக்கேக்கை எல்லாரும் நல்ல சாப்பாடு சாப்பிட்டு, நல்ல உடுப்புப் போட்டு நல்லா இருந்தவை. இப்ப பாருங்கோவன் எல்லாம் சீத்துவக் கேடாப்போச்சுது. ஒழுக்கம் சுத்தமா் இல்லை. எல்லாரும் கண்டபடி நடக்கத் துவங்கிவிட்டினம். ஒரே கொலையும் கொள்ளையுமாக் கிடக்கு.

இதுக்கை என்னையும், மைத்திரியையும் தனியா இல்லை, குடும்பத்தோடை சாக்காட்டப் பிளான் போடினம். அப்ப உவையளைச் சிம்பிளா விட ஏலுமோ? இதுக்கு மைத்திரியின்ரை ஆக்களை ஒரு மாதிரிவளைச்சுப்போட்டு அரசாங்கத்தை விழுத்தி நாங்கள் பவறுக்குவரவேணும் - எண்டு சொல்லிக் கொண்டு மஹிந்தா தன்ரைவீட்டிலை கூட்டம் போட்டிருக்கிறாராம்.

எவ்வளவு அக்கறையான சனம் பாருங்கோ? தெரியாமல் சனம் ரணிலுக்கு வோட்டுப் போட்டுக் குளத்தை கலக்கி இறைச்ச மாதிரி இறைச்சுப் போட்டு நிக்கிதுகள். நாங்கள் என்னத்தைக் குறைவிட்டனாங்கள். நல்ல றோட்டுப்போட்டுக் குடுத்திருக்கிறம். சனம் பயமில்லாமல் எங்கையும் போய்வாற மாதிரி பயங்கரவாதத்தை ஒழிச்சிருக்கிறம். சனம் ஒரு சின்னக் குறை சொல்லுக் கொண்டு திரியினம். நாங்கள் முள்ளிவாய்க்காலிலை கொஞ்சத் தமிழ் சனத்தைக் கொண்டு போட்டமாம். என்ன புலிக்குப் போட்ட குண்டுகள் தவறி அங்காலை இஞ்சாலை விழுந்து போச்சுது. அதுக்கென்ன செய்யிறது? குடத்துக்கை தண்ணி விடேக்கை அங்காலை இஞ்சாலை தெறிக்கிறது வழமையானதுதானே? அதுக்குப் புத்தி கெட்ட ஐ.நாவும் அவையோடை சேந்து வக்காலத்து வாங்கினம்.

அதுக்குக் கூக்குரலிட்டு. ஜெனீவாவிலை எங்களை மானங்கெடுத்து. எத்தினை படினம் விடுகினம். மனிசத்தன்மை இல்லாமல் போச்சுது. உது தான் சொல்லுறது மற்றவைக்கு நன்மை செய்யப்பிடாது எண்டு. நானும் மற்றவையளைப்போலை கையைக் கட்டிக் கொண்டு நிண்டிருக்கலாம். என்ன எத்தினையோ கோடிக்கணக்கான காசும், சொத்தும் இல்லாமல் போயிருக்கும். அவ்வளவுதான். என்ன போகேக்கை கொண்டு போகப்போறமே? போகேக்கை ஆர் கொண்டு போனவை? இதைச் சொல்லச் சொல்ல என்ரை பெடியளுக்கும் விளங்கேல்லை. தம்பிமாருக்கும் விளங்கேல்லை. ஏன்? என்ரை பத்தினிக்கும் விளங்கேல்லை. அது இன்னும் அவாப்படுகிது. சொன்னால் கேட்டாத்தானே? அரசியலுக்கை வாறது என்னத்துக் கெண்டு கேக்கினம். அனுபவிக்கத்தானே? எண்டு மஹிந்தா சொல்லிப் புலம்பிறதை நான் ஆரிட்டைச் சொல்லி அழ?

**கோ்ளராங்கன்**

---

மார்கழி மாதத்து நிலாவில்
இருளும் குளிரும் ஒட்டியிருந்தன
எல்லா அறைகளிலும்
தூக்கம் நிரம்பியிருந்தது.
அவனிருந்தான்
அசைவற்ற சாரளச்சேலைகளில்
முடியுறும் யுகங்களைப் பார்த்தவாறு
அவனிலிருந்து அவன் வெளிவந்தபோது
நீரைப்பாடும் தவளைக் குரல்கள் பேரமைதி கொண்டன
ஒரு தேகத்தின் இரண்டு தேகங்கள்
எரிதெரிர் அமர்ந்தன
அவனின் இன்னொருவன் புன்னகைத்தான்
இவன் அவனிடம் பேசத் தொடங்கினான்.

மடை திறந்த மழை கொட்டத் தொடங்கியது
அவன் அவளுமானான்
இவனுமானான்

ஏலோலம்பாவாய்.

# மாமழை



# அல்லது பெருஞ் சிரிப்பு



நகைப்புக்குமிடமாயப் போனவனும்
யாருக்கும் பிரியமில்லாதவனும்
மலத்தால் மெழுகப்படுபவனும்
காமத்தால் விடாது விந்து ஒழுக்குபவனும்
விரைந்து வயோதிகம் கூடியவனும்
இவனே அவனே என ஆடி
அவனைக்காட்டி இவனை மறைத்து
இவனைக்காட்டி அவனை மறைத்து
பொய்யாடி மெய்மறைந்து
இருளுண்டு சிதைந்தழுகி
குஞ்சங்கள் சோடனைகள் போட்டாட

ஏன் வாழ்கிறாய் புழுவே இன்னும்? என்ற போது

வெடித்துச் சிதறி யழிந்து
பின் பிணமா யெழுந்து புன்னகை செறிந்து
நடையாய் நடந்து வீணிற் கரைகையில்

“சொன்னனே அன்றே பித்தன் அவன்” என்றாள்.

**‘அம்மை’ பா.அகிலன் கவிதைகள்.**

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

45

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா



பெரியமடுவில் வெகு நேர்த்தியான முறையில் தேக்கம் குற்றிகளாலும் மண்மூடைகளாலும் காவல் நிலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அங்கு சென்ற பிறகுதான், பரப்புக்கடந்தானிலிருந்து போராளிகள் பின்வாங்கிவிட்ட விடயத்தை அறிந்து கொண்டான். இப்போது காவல் வரிசை பெரியமடு, ஈச்சிலவத்தை, ஆலங்குளம், அடம்பன், சிறுநாவற்குளம், பாப்பாமோட்டை என நீண்டிருந்தது.

காவல் நிலைகள் பற்றைகள் போன்றும், வைக்கோல் போர்கள் போன்றும் நன்றாகவே உருமறைப்புச் செய்யப்பட்டிருந்தன. பெரியமடு வந்து சேர்ந்த சிறிது நேரத்தில் கீதாவும் பதினெட்டுப் பெண் போராளிகளும் படையினரின் சுற்றிவளைப்புள் அகப்பட்டு வீரச்சாவடைந்து விட்டனர் எனச் செய்தி வந்தது. கீதாவின் இழப்பு சிவத்தை உலுப்பியே விட்டது. அவள் ஒரு சிறந்த போராளி மட்டுமன்றி, அணியை வழிநடத்துவதில் தனித்துவமான ஆற்றல் மிக்கவள்.

● ● ●

அவள் நல்ல அழகியும் கூட. அவளின் நீண்ட கருங்கூந்தலைக் கண்டு பல பெண் போராளிகள் பொறாமைப்படுவதுண்டு. அவளின் வித்துடல் படையினரிடம் அகப்பட்டால் உயிரற்ற அவளின் உடலைக்கூட சிதைக்காமல் விடமாட்டார்கள். அந்தப் பத்தொன்பது பெண் போராளிகளினதும் உடல்கள் மீட்கப்படவில்லை என்பதைக் கேள்விப்பட்ட போது அவனின் நெஞ்சு நடுங்கியது.

முன்பு மணலாற்றில் ஐந்து முகாம்கள் மீதான தாக்குதலின் போது படையினர் தங்களிடம் அகப்பட்ட பெண் போராளிகளின் உயிரற்ற உடல்களின் கழுத்தை வெட்டியும், மார்பகங்களை அறுத்தும், பெண்ணுறுப்பைச் சிதைத்தும் பொலித்தீன் பைகளில் போட்டு அனுப்பியமை அவனின் நினைவுக்கு வந்தது. கீதாவின் அழகிய உடலுக்கும் அப்படி ஒரு கதி ஏற்பட்டுவிடுமோ என அவன் அஞ்சினான்.

மாபெரும் தரையிறக்கத்தின் போது இருபக்கமும் படையினர் தாக்குதல் தொடுக்க நடுவே நின்று போராளிகள் போராடிய போது அவள் நடத்திய வீர சாகசங்கள் அவன் நினைவில் வந்து போயின. அவள் நிலத்தடி பங்கரில் நின்று போராடிக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக எதிரியின் டாங்கி ஒன்று நெருங்கிவிட்டது. அவளை நசுக்கும் நோக்கில் டாங்கி பங்கர் மேலால் நகர்ந்தது. சாதுரியமாக செயினுக்குள் அகப்படாமல் தடுப்பதற்கு உருண்ட அவள் அதன் பின் பக்கத்தால் பாய்ந்து ஏறி, கைக்குண்டைக் கழற்றி மேல் கதவால் போட்டுவிட்டாள். டாங்கிக்குள்ளிருந்த நான்கு படையினரும் உடல் சிதறி இறந்துவிட்டனர்.

அவளைப் போன்ற துணிவும் வீரமும் கொண்ட போராளிகளின் இழப்பு என்பது பேரிழப்பாகும் என்றே சிவம் கருதினான். ஒரு பெருமூச்சுடன் அவன் அடுத்த பணிகளை மேற்கொள்ள ஆரம்பித்தான்.

● ● ●

அன்று இரவு சுந்தரத்துக்கு தூக்கம் வர மறுத்துவிட்டது. இலுப்பைக்கடவை மருத்துவ மனையில் எறிகணை வீச்சிலும், விமானத் தாக்குதலிலும் படுகாயமடைந்த பலர் அனுமதிக்கப் பட்டிருந்தனர். மக்கள் உயிரைப் பாதுகாக்க ஊர்விட்டு ஓடினாலும் கூடப் படையினர், அவர்களைக் கொல்வதிலும் காயப்படுத்துவதிலும் குறியாகவே இருந்தனர்.

அவர்களின் மக்கள் மீதான கொலைவெறி முதியவர்கள், சிறுவர், சிறுமியரைக்கூட விட்டுவைக்கவில்லை. முதல் நாள் மாலையே கொண்டுவந்த தகரங்களையும் தடிகளையும் பாவித்து ஒரு கொட்டில் அமைத்துக் கொண்டனர். பெருமாளின் கூடாரத்தையும் தடியை நட்டு இழுத்துக் கட்டி விட்டனர்.

சுந்தரம் வெளியே மணலிலேயே படுத்துவிட்டான். நீண்ட நேரத்தின் பின்பே அவனால் தூங்க முடிந்தது. மறுநாள் காலை விழித்தெழுந்த போது வானம் மஞ்சள் வர்ணம் பூச ஆரம்பித்து விட்டது. முத்தையர் எல்லோருக்கும் தேனீர் தயாரித்து கொடுத்தார். முத்தம்மா ஒரு தேனீர் குவளையை வாங்கிக் கொண்டு போய் சுந்தரத்திடம் நீட்டினாள்.

அவனும் எதுவுமே பேசாமலே வாங்கிக் குடிக்க ஆரம்பித்தான். முருகரப்பு பரமசிவத்திடம் கேட்டார், “இனி என்ன செய்யிறதாய் உத்தேசம்?”

பரமசிவம் சில விநாடிகள் யோசித்துவிட்டு, “அந்தக் கரையிலை ஒரு நல்ல இடமாய்ப் பாத்து மரக்கறியெண்டாலும் போடோணும்”, என்றார்.

“மரக்கறி காய்க்கத் தொடங்கு முன்பே இஞ்சையிருந்தும் வெளிக்கிடுற நிலைமை ஏற்பட்டால்..”

“அப்பிடி நடக்குமெண்டு நினைக்கிறியே?” எனக் கேட்டார் பரமசிவம்.

“சண்டையிலை உதுகளெல்லாம் சொல்லிக் கொண்டே” பரமசிவம் ஆமோதித்தார்.

“உண்மைதான்.. ஆனால் அதுக்காகச் சும்மா இருக்க ஏலுமே?.. வயித்துப் பாட்டுக்கு ஏதும் பாக்கத்தானே வேணும்”

முருகரப்பு சிறிது நேரம் எதையோ ஆழமாக யோசித்துவிட்டு, “எனக்கு முழங்காவிலில வேலுப்பிள்ளையெண்டு சிநேகிதன் இருக்கிறான். நல்ல செம்பாட்டுமண் காணி, தண்ணியும் நல்ல தண்ணி. அங்கை போனமெண்டால் வடிவாய்த் தோட்டம் செய்யலாம்”, எனக் கூறினார்.

பரமசிவத்துக்கும் அது நல்ல யோசனை போலவே பட்டது. “அப்பிடி ஒரு வசதி இருக்குமெண்டால் போறது நல்லதுதானே!” என்றார் பரமசிவம். எல்லோரும் கூடி ஆலோசித்த பின்பு அடுத்த நாள் அதிகாலையில் புறப்படுவதாக முடிவெடுத்தனர்.

● ● ●

அடம்பன், பாப்பாமோட்டை, ஆலங்குளம் பகுதிகளைப் போராளிகள் மிக முக்கிய மையமாகவே கருதினர். தள்ளாடி இராணுவம் அந்த முனைகளால் உடைக்குமாக இருந்தால் போராளிகள் மிக நீண்ட தூரம் பின்வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். அது மட்டுமன்றி இடம்பெறும் சண்டையின் பிரதான விநியோக மையமாகவும் தள்ளாடியே விளங்கியது.

மேலும் ஒரு பெரும் வாகனத் தொடரணி ஆயுதங்களுடனும், வெடி பொருட்களுடனும் வந்திருப்பதாகவும் ‘வேவு’த் தகவல்கள் கிடைத்தன. எனவே தள்ளாடி முகாமின் செயற்பாடுகளைப் பலவீனப்படுத்தும் வகையில் ஒரு தாக்குதல் மேற்கொள்ள வேண்டும் என முடிவெடுக்கப்பட்டு இரு தற்கொடை அணிகள் மூலம் வாகனத் தொடரணியையும், ஆட்டிலறித் தளத்தையும் தகர்ப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

செங்குட்டுவனும் கிரியும் தள்ளாடிக்குள் புகுந்து வாகனத் தொடரணியைத் தாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது என்றும் ஜான்சியும், மேகாவும் ஆட்லறித் தளத்தை இலக்கு வைப்பது எனவும் திட்டமிடப்பட்டது. மாலை மங்கிக் கொண்டிருந்த அவ்வேளையில் செங்குட்டுவனையும், கிரியையும் கடலால் கொண்டு சென்று மாந்தையின் திருக்கேதீஸ்வரத்தின் பின்புறமாக இறக்கிவிட்டனர்.

தாங்கள் அணிந்திருந்த மீனவர்களின் உடையைக் கழற்றிவிட்டுப் பைகளில் கொண்டு வந்த இராணுவச் சீருடைகளை அணிந்து கொண்டனர். கொண்டுவந்த பையை வள்ளத்தில் கொடுத்துவிட்டு விடத்தல் மரங்களும், விளாத்திகளும் நிறைந்த அந்தக் காட்டினூடாக நடக்கத் தொடங்கினர். அவர்கள் பாலாவியாற்றைக் கடந்து மன்னார் பூநகரி வீதியில் ஏறவேண்டும். அடிக்கடி சுழலும் ‘போக்கஸ்’ வெளிச்சம் பட்டுவிடாமல் வெகு அவதானமாக நகரவேண்டியிருந்தது.

பாலாவியைக் கடக்கும்போது மிகவும் எச்சரிக்கையுடன் நடக்க வேண்டியிருந்தது. படையினர் நீருக்குள்ளும் முட்கம்பிச் சுருள்களைப் போட்டு வைத்திருக்கக் கூடும்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# காப்ரியேல் கார்சியா மார்க்கேஸின் 'முன்கூறப்பட்ட சாவின் சரித்திரம்'






- பு.பிரசாந்

பன்றிகளை அறுக்கும் இரண்டு கத்திகளை பத்திரிகைத் தாளில் சுருட்டிவைத்துக் கொண்டு ஆங்கெலா விகாரியோவின் சகோதரர்கள் அவனைக் கொல்வதற்குக் காத்துக் கொண்டிருந்தார்கள். தனக்கு ஒரே இரவில் விதிக்கப்பட்ட மரணத்தைப் பற்றி சந்தியாகோ நாஸாருக்கு கடைசித் தருணம் வரை தெரியாமலே இருந்தது. ஆனால் அவனைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் அவன் சாவிற்கான காத்திருப்பை அறிந்து கொண்டவர்களாக இருந்தார்கள். நேற்றைக்கு வரைக்கும் ஒன்றாகக் குடித்துக் கொண்டாட்டத்தில் திளைத்தவர்களுக்குள் ஒரே இரவில் அப்படி என்ன நடந்தது?

சாகசக்காரனும் நினைத்ததை முடிப்பவனுமான பயார்தோ சான் ரோமான், ஆங்கெலா விகாரியோ மீது தீராக்காதல் கொண்டான். அவளுக்காக எதையும் செய்ய அவன் தயாராகவிருந்தான். யாரும் எதிர்பார்க்காதபடி பெரும்செலவில் தனது திருமணத்தை நடத்தினான். முதலிரவு அன்று புதுமணத்தம்பதிகளான இருவரும் விலைமதிப்பற்ற சையுஸின் வீட்டுக்குப் போனார்கள். அன்றைக்கு இரவே, ஆங்கெலா விகாரியோ ஏற்கனவே தன் கன்னித்தன்மையை இழந்துவிட்டாள் என்ற கோபத்தில் பயார்தோ சான் ரோமான் உடைந்த மனதோடு அவளை வீட்டைவிட்டு துரத்திவிட்டான்.

வீட்டுக்கு வந்த அவளை, இதற்கு யார் காரணம் என்று துன்புறுத்திக் கேட்டபோது அவள் சந்தியாகோ நாஸாரின் பெயரைச் சொன்னாள். பன்றிக் குடில்களில் பன்றியை அறுக்கும் விகாரியோவின் இரட்டைச் சகோதரர்கள் இழந்த மானத்தை சரிக்கட்ட அவனைக் கொல்வதே சரியான வழி என்று இரண்டு கத்திகளை எடுத்துக்கொண்டு திருமணத்துக்கு அணிந்த ஆடைகளையும் களையாமல் விரைந்தார்கள். அவர்கள் அவனைக் கொல்லப்போவதைப் பற்றி எதிர்ப்பட்ட எல்லோரிடமும் வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டார்கள். அவன் சாகவேண்டும் என்பதில் மிகத் தீவிரமாகவே இருந்தார்கள். நடக்க இருப்பதை யாராவது தடுப்பதற்கு வாய்ப்பு இருந்தது. ஆனால் கடைசியில் அந்தக் கொலை நடந்து முடிகிறது.

காப்ரியேல் கார்சியா மார்க்கேஸின் 'முன் கூறப்பட்ட சாவின் சரித்திரம்' நாவலின் விபரிப்பு முறையே காட்சிகளை படம்போல கண்முன் நிகழ்த்திக் காட்டுவதாக இருக்கிறது. கதையின் முதல் அத்தியாயத்தில் தொடரும் விசாரணைப் போக்கு முழுக் கதையையும் சொல்லி முடிக்கிறது. கதையின் கனமும் அடர்த்தியும் விபரிப்புமுறையும் சொல்லமுடியாத ஏதோ ஒரு உணர்வுக்குள் கட்டிப்போட்டு வாசகனை மேலும் வாசிக்கத் தூண்டி விடுகிறது. படித்து முடித்த பிறகும் அதன் நினைவும் தாக்கமும் நீண்டநாளைக்கு உங்களை அலைக்கழிக்கும். இலக்கிய ஆர்வலர்கள் படிக்கவேண்டிய நாவல். மொழிபெயர்ப்பாளர்கள் அருமைசெல்வம், அசதா ஆகியோரின் மொழிபெயர்ப்பில் 2016 காலச்சுவடு வெளியீடாக வந்திருக்கும் தரமான மொழிபெயர்ப்பு நாவல்.



நேற்றும் சில
நட்சத்திரங்களைக் கடந்து
செல்லக் கிடைத்தது.
கடந்து செல்லும்போது
சில மலைகளையும்
சில மேகங்களையும்
கடந்து செல்ல
வேண்டியிருந்தது
யார் யாரோ யோசிக்கலாம்
இப்படிக் கடந்து செல்லும்
நான் யாரென
நான் பறவையென்பதா ?
நான் காற்று என்பதா ?
நான் என் ராஜகுமாரியின்
நினைவு என்பதா?
ஆழத்தின் அறிதலை
மனப்பேழை நிரப்பி
நீங்கள்தான் முடிவெடுக்க
வேண்டும்.
சில நேரம்
குகை ஒன்றினுள் ஓவியமாய்
இருக்கிறேன்
சிலநேரம்
ஆதி நிறத்தின்
வண்ணமாய் இருக்கிறேன்
சிலநேரம்
சலனங்களைப் பருகிய
பெருங்காடாய் இருக்கிறேன்
நான் யார் என்பதை
நீங்கள்தான் முடிவெடுக்க
வேண்டும்.
உங்களது ஒவ்வொரு
முடிவிலும்
காலத்தையும் வாழ்வையும்
கடந்து செல்கிறேன் நான்.

- ஏ.நஸ்புள்ளாஹ்.

# மண்ட்டோ




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

-சங்கரசுப்ரமணியம்

இந்திய சினிமாவின் மதிப்பிற்குரிய ஆளுமைகளில் ஒருவரான நந்திதா தாஸின் எழுத்து இயக்கத்தில் வெளிவந்துள்ள 'மண்ட்டோ' திரைப்படம் பார்த்தேன். அரசியல் தலைவர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், விளையாட்டுத்துறைச் சாதனையாளர்கள், கலைஞர்கள் என்று வாழ்க்கை வரலாற்றுக் கதைகளை திரைப்படமாக






எடுப்பதை விட ஒரு எழுத்தாளனின் வாழ்க்கையைக் கதையாக்குவது கடினமான பணி தான். அதை வெற்றிகரமாகக் கையாண்டு இருப்பதோடு படைப்பின் ஊடாக தேசம் - அரசு - மதம் அவை கட்டமைக்கும் புனிதங்கள், அதனால் ரணமாகும் மனித உடல்கள் என மிக நுட்பமாகப் பேசி, ஒரு கடந்தகாலக் கதைக்கு சமகாலத் தன்மையை உருவாக்குகிறார் நந்திதா.

நூறு விளக்குகளின் வெளிச்சம், திற, சில்லிட்டுப்போன சதைப்பிண்டம் , ஷோபாடேக் சிங் ஆகிய கதைகள் நாடகப்படுத்தப்பட்டு மையக் கதைப் போக்கோடு இலகுவாக இணைந்து மண்ட்டோவின் படைப்பு மனதையும் அழகியலையும் வெளிப்படுத்துகின்றன.

மண்ட்டோவாக வாழ்ந்திருக்கும் நாவாசுதீன் சித்திக்குக்கு சற்றும் குறையாமல் அடக்கி வாசித்தும் மனைவி ஷபியாவாக வரும் இரசிகா துகல் மனம் நிறைய வைக்கிறார்.

மண்ட்டோவின் சக பயணிகளும் மண்ட்டோவின் கதை மாந்தர்கள், டீக்கடை சதுக்கத்தில் அங்கிள் சாமுக்கு மண்ட்டோ எழுதிய கடிதங்களை வாசிக்கும் சாதாரண வாசகர், அதைக் கேட்டு வினையாற்றும் மனிதர்கள், மண்ட்டோவே வாசிக்கும் 'தவறு சரி செய்யப்பட்டது' போன்ற சொற் சித்திரங்கள், தண்டா கோஷ் - சில்லிட்ட சதைப்பிண்டம் கதையை ஒட்டி நடக்கும் கோர்ட் நிகழ்வுகளென எழுத்தும் - வாழ்வும் கைகோர்த்துப் பயணித்து திரை மொழிக்கு அழகு சேர்க்கின்றன.

ராமாநுஜம் மொழிபெயர்ப்பில் மண்டோ படைப்புகள் ஐந்து பதிப்புகளைக் கண்டுள்ளது. உதய சங்கர் உள்ளிட்ட பிறரும் மண்டோ தமிழ் மொழிபெயர்ப்புப் பணியில் பங்களித்துள்ளனர்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# உறவுகளால் கொண்டாடப்படுபவனே உயர்ந்தவன்

பின்பற்றப்பட வேண்டிய முன்னுதாரணம் 26

உலகத்திலே மிகவும் பெருமைமிக்க விடயம் ஒருவரைப் பாராட்டுவது. தாய் மகவைப் பாராட்ட வேண்டும். பெற்றோர் பிள்ளையைப் பாராட்ட வேண்டும். சமூகம் தனது அங்கத்தவரைப் பாராட்ட வேண்டும். நாடு தனது குடிமகனைப் பாராட்ட வேண்டும். உறவு தனது உரிமையைப் பாராட்ட வேண்டும்.எனவே பாராட்டுவது ஒரு தர்மம். அது ஆன்மிகத்துக்குள் அடங்குகிறது. ஒரு ஆன்மாவின் சந்தோஷம் பாராட்டாக வெளிப்படுகிறது. நன்றி என்ற விடயமும் அவ்வகமைக்குட்பட்டதே.

கடந்த சனிக்கிழமை 29.10.2018 அன்று இணுவில் இலக்கிய வட்டத்தால் எழுத்தாளர் சாந்தனுடன் ஒரு மகிழ்வுப் பகிர்வு என்ற தலைப்பில் ஒரு நிகழ்வு இணுவில் கந்தசாமி கோவிலுக்கு அருகிலுள்ள அறிவாலயத்தில் நடைபெற்றது. நானும் கலந்துகொண்டேன். உண்மையிலேயே சாந்தனின் எழுத்தில் ஈடுபாடு கொண்டவர்களும், அவரை நேசிப்பவர்களும், அவரின் மாணவர்களும், அவர் நெருங்கிய உறவுகளுமாக மண்டபம் நிறைந்திருந்தது. இதை ஒரு நிறைவான நிகழ்வென்று குறிப்பிட்டார் கலாநிதி ஆறு திருமுருகன்.



முன்னர் கொழும்பு தமிழ் சங்கத்தில் நடைபெற்ற சாந்தனின் எழுத்துலகம் பற்றிய ஒரு கலந்துரையாடல் நிகழ்வில் நான் கலந்துகொண்டேன். பேச்சுக்கள் முடிந்ததும் அவற்றைப் பதிவெடுக்கவில்லையே என்ற வருத்தம் எனக்குள்ளிருந்தது. ஏனெனில் அங்கு பேசியவர்கள் சாந்தனின் அத்தனை படைப்பு களையும் பற்றி விலாவாரியாகப் பேசியிருந்ததே அதற்குக் காரணம்.

ஒரு நீண்டகால எழுத்தாளன் என்ற வகையில் ஈழத்து எழுத்துலகத்தில் சாந்தனுக்கு



ஒரு முக்கியமான இடம் உண்டென்பதை நான் அறிவேன். மனநெருடல்களை எழுத்தாகப் படைப்பதில் அவர் வல்லவர். அநீதி எனக் கண்டவுடன் அவருக்கு முன்னர் அவர் பேனா பேசத் தொடங்கிவிடும். ஒரு எழுத்தாளர் என்றதற்கு அப்பால் அவரிடமுள்ள கல்வி சார் விடயங்கள் பலமடங்கென்பதை அவரைத் தெரிந்தவர் மட்டுமே அறிந்த விடயம். எதிர்கால மனித குலம் இடர்பட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சிந்திப்பவர் அவர். இன்று சமூக அக்கறையற்றவர்களாக நாம் இருப்பதைக் கண்டு பொங்கியெழும் அவர் நாளைய உலகத்தில் எமது சமூகம் எதிர்கொள்ளப்போகும் நன்நீர் பிரச்சினை பற்றியே அதிகளவு சிந்திக்கிறார். அதற்கான தேக்கங்களையும், வடிகால்களையும் அமைத்துச் செயற்பட வேண்டும் என்பது ஒவ்வொரு மனிதனின் தலையாய கடமை என்றும் அவர் சொல்கிறார். அது மட்டுமல்ல இளைஞர்களுக்கான தொழில் வாய்ப்புகளை உருவாக்க வேண்டிய முறைமைகள் பற்றியும், அதற்கான வழிகாட்டியாக என்னென்ன செய்ய வேண்டும் என்றதனையும் அவர் திட்மிட்டு வைத்திருக்கிறார். ஆனால் ஒரு கை அசைத்து ஓசை வருவதில்லை. அவர்போலச் சிந்திக்கக் கூடிய ஒரு செயலணியினரும் அவருடன் இணைய வேண்டும்.அப்போது மட்டுமே அவர் எண்ணங்கள் செயல்வடிவத்தைப் பெறும்.

அப்படிப்பட்ட நல்லெண் ணங்களோடு பயணிக்கின்ற சாந்தனுக்கு இந்திய சாகித்திய அகடமி விருது கிடைத்திருக் கிறது. அந்த விடயத்தை நாமும் கொண்டாட வேண்டும் என்று புறப்பட்டவர் கலாநிதி ஆறு திருமுருகன். அவரோடு கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் இணைந்ததன் விளைவு நிகழ்வு நடந்தேறியிருக்கிறது. அவர் பிறந்த மண்ணிலே அவருக்கான நிகழ்வு. அதுவே பெருமை தரும் விடயம். மாலை மரியாதைகள் அற்று நடந்த நிகழ்வு என்பதுவும் அதன் பெருமை.

முதலில் ஒரு மனிதன் தன்னைத் தான் கொண்டாட வேண்டும். அப்போதே பிறரும் அவரைக் கொண்டாடுவார்கள். அதேபோல எம்மவரை நாம் கொண்டாட வேண்டும். அவரை மட்டுமல்ல அவர் படைப்புகளையும் சேர்த்து அவரை ஆதரிக்க வேண்டும் என்றதற்கு இந்த விழா ஒரு நல்ல முன்னுதாரணமாகக் கொள்ள லாம். உறவுகளால் கொண்டாடப் படுபவனே உயர்ந்தவன். சாந்த னும் உறவுகளால் கொண்டாடப் பட்டார். அதையும் ஒரு சாகித்ய அகடமி விருதாக அவர் கருதலாம்.

## கலைந்துபோகும்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியோர் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு பேசியதாகவும் பிரதமர் மேற்படி கருத்துத் தொடர்பாக சில அழுத்தங்களை ஜனாதிபதிக்கும் கொடுத்ததாகவும் தெரிய வருகின்றது. இவற்றுக்கும் ஜனாதிபதியின் ஐ.நா. உரைக்குமுள்ள தொடர்பை உற்றுநோக்கினால் இலங்கையின் இறைமையைப் பற்றி நாம் புரிந்துகொள்ள முடியும்.

அவரின் உரையில் தாங்கள் பலஸ்தீன மக்களின் விடுதலை போராட்டத்தை ஆதரிப்பதாகவும் பலஸ்தீன மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தடுத்து நிறுத்த ஐ.நா. சபையும் உறுப்பு நாடுகளும் கூடுதல் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் கூறப்பட்டது.

இஸ்ரேல், பலஸ்தீன மக்களை எறிகணைகளால் கொன்று குவிக்கிறது ஏராளமான மக்களை விசாரணைகளின்றித் தடுத்து வைத்திருக்கின்றது : பலஸ்தீன மக்களின் காணிகளை அபகரித்து குடியேற்றங்களை அமைகிறது. இதே அநீதிகளை இலங்கை அரசும் அரச படைகளும் போரின்போதும் போரின் பின்பும் எவ்வித குறைவுமின்றி மேற்கொண்டு வருகின்றன.

ஆனால் ஜனாதிபதி பலஸ்தீன மக்களின் விடுதலைக்காக ஐ.நா. சபையில் கண்ணீர் விட்டுக் கொண்டு, பலஸ்தீன மக்கள் மீது இழைக்கப்படும் அதே கொடுமைகளைத் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளும் அரச படைகளை குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்து மீட்கும் நாயகனாக முயற்சிக்கின்றார்.

வீரநாயகனாகத் தன்னை வெளிக்காட்ட அவர் ஐ.நா. சபையில் அரங்கேற்ற முயன்ற நாடகம் மேடையேற்ற முடியாமலே போய் விட்டது. எனினும் அவர் தனது முயற்சியைக் கைவிடத் தயாரில்லை. அவர் அமெரிக்காவில் உள்ள இலங்கையர்களுடன் மேற்கொண்ட சந்திப்பின்போது விடுதலைப் புலிகள் இந்தியாவின் தமிழ்நாட்டுக் காடுகளிலிருந்து கொழும்பின் மீது விமானத் தாக்குதலை நடத்தத் திட்டமிட்டிருந்தனர் எனவும் அதனால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோர் பயந்து வெளிநாடுகளுக்கு ஓடி விட்டனர் எனவும் தானே பதில் பாதுகாப்பு அமைச்சராகச் செயற்பட்டு இறுதிப் போரை நடத்தி முடித்ததாகவும் தெரிவித்திருந்தார்.

இதுவரை போர் வெற்றிக்கு மஹிந்த, கோத்தபாய, சரத் பொன்சேகா ஆகியோரே உரிமை கோரினர். இப்போது அவர்களைத் தள்ளிவிட்டு மைத்திரிபால சிறிசேன வீரநாயகனாக அவதாரம் எடுத்து விட்டார். ஆனால் அதர்மத்தையும் அநீதியையும் அத்திபாரமாகக் கொண்டு எழுப்பப்படும் வீரநாயக விம்பங்கள் வெகு விரைவிலேயே உதிர்ந்து விழும் என்பதே உலக நியதியாகும்.



லிங்குசாமி இயக்கத்தில் விஷால் நடித்த ‘சண்டைக்கோழி’ படம் பெருவெற்றிப் படமாக அமைந்தது.

இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் இம்மாதம் 18 ஆம் திகதி வெளியாகிறது.

இந்நிலையில் ‘சண்டைக்கோழி’ 3 படமும் உருவாகும். இதையும் லிங்குசாமியே இயக்குவார் என அறிவித்துள்ளார் விஷால்.





இந்தியாவின் பிரபல பட்மின்ரன் வீராங்கனை சாய்னா நேஹ்வாலின் வாழ்க்கை வரலாறு படத்தில் நடிக்கிறார் ஸ்ரத்தா கபூர்.

ஸ்ரத்தாவின் தோற்றம் சாய்னாவை அப்படியே பிரதிபலிக்கிறது என பலரும் பாராட்டுகின்றனர்.

தவிர, தமிழ், தெலுங்கு, ஹிந்தியில் உருவாகும் பிரபாஸின் ‘சாஹோ’ படமும் ஸ்ரத்தாவுக்கு பெரும் பெயரைப் பெற்றுக் கொடுக்கும் எனப் பலரும் கூறுகின்றனர்.

‘சர்கார்’ படத்தின் பாடல்கள் கடந்த செவ்வாய்க் கிழமை வெளியாகின. ஆனால் அதற்கு முன்னதாகவே அனைத்துப் பாடல்களும் இணையங்களில் வெளியாகி படக்குழுவை அதிர்ச்சி அடையச் செய்தது.

சுந்தர் சி இயக்கத்தில் சிம்பு நடிக்கும் படத்தில் கேத்ரீன் தெரஷா இரண்டாவது நாயகியாக ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

முதல்கட்டப் படப்பிடிப்பு முடிவடைந்த நிலையில் சிம்பு - கேத்ரீன் சம்பந்தப்பட்ட காட்சிகள் படமாக்கப்படுகின்றன.

2019 ஆம் ஆண்டு படத்தை வெளியிட லைகா நிறுவனம் முடிவெடுத்துள்ளது.



# மீண்டும் இணைவு

கடந்த ஏப்ரல் மாதம் வடகொரிய - தென் கொரிய ஜனாதிபதிகள் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் கொரிய தீபகற்பத்தில் சுமுகநிலை ஏற்பட்டது. இது சாத்தியப்படுவதற்கு கடந்த பெப்ரவரி மாதம் தென்கொரியாவில் நடைபெற்ற குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்க வடகொரியா 22 வீரர்களை அனுப்பியதும் பிரதான காரணமாக இருந்தது. இதையடுத்து நடைபெற்று முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தென் கொரியாவும் வடகொரியாவும் இணைந்து ஒரே அணியாக படகோட்டுதல் மற்றும் மகளிர் கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்குபற்றியிருந்தன. அத்தோடு இருநாட்டு வீரர்களும் தொடக்க நிகழ்விலும் இறுதி நிகழ்விலும் ஒரே கொடியின் கீழ் ஒன்றாக அணிவகுத்துச் சென்றும் இருந்தார்கள்.

அந்தவகையில் இந்த ஒற்றுமையின் இன்னொரு பரிணாமமாக 2020 ஆம் ஆண்டு ரோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டிகளில் இவ்விரு நாடுகளும் இணைந்து ஜிம்னாஸ்ரிக் போட்டிகளில் பங்கு பெறத் தற்போது திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. இது குறித்த கலந்துரையாடல் டோகாவில் நடைபெறவுள்ள உலக சம்பியன்ஷிப் தொடரின்பொழுது இடம்பெறவுள்ளது. இவர்களுக்கிடையிலான ஒற்றுமையை வலுப்படுத்துவதில் சர்வதேச ஜிம்னாஸ்ரிக் சம்மேளனமும் ஆர்வமாக உள்ளது.

அதேசமயம் கடந்தவாரம் தென்கொரியாவில் நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்பின் பொழுது 2032 ஒலிம்பிக் போட்டிகளையும் பரா ஒலிம்பிக் போட்டிகளையும் இரு நாடுகளும் இணைந்து நடத்த இரு கொரிய ஜனாதிபதிகளும் கூட்டாக மனு அளிப்பதற்கு இணங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் சம்பியன்

கடந்தவாரம் அமெரிக்காவின் சிக்காக்கோ நகரில் நடைபெற்று முடிந்த லேவர் கிண்ண ரென்னிஸ் தொடரை ஐரோப்பிய அணி 13 : 8 என்ற ரீதியில் வென்றுள்ளது. அவுஸ்ரேலிய முன்னாள் ரென்னிஸ் வீரரான றொட்னி லேவர் பெயரில் நடத்தப்பட்டு வரும் ஆண்களுக்கான இந்தத் தொடர் ஐரோப்பிய அணிக்கும் றெஸ்ட் ஒப் த வேள்ட் அணிக்கும் இடையில் நடைபெற்று வருகின்றது.




இந்தத் தொடரில் மொத்தம் 12 போட்டிகள் நடைபெறும். இதில் 9 ஒற்றையர் போட்டிகளும் 3 இரட்டையர் போட்டிகளும் அடங்கும். இந்த 12 போட்டிகளின் முடிவில் இருஅணிகளும் சமநிலையில் இருந்தால் 13 ஆவது போட்டி நடைபெறும்.

இரு அணிகளிலும் தலா 6 வீரர்கள் இடம்பெற்றாலும் ஐரோப்பிய அணிக்கு முன்னாள் சுவீடன் வீரரான ஜோன் பேர்க்கும் உலக அணிக்கு முன்னாள் அமெரிக்க வீரரான ஜோன் மைக்என்றோவும் முதல் மூன்று பருவகாலத்திற்கும் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்த வகையில் இந்தத் தொடரில் றோஜர் பெடரர், ஜோகோவிச் போன்றவர்கள் ஐரோப்பிய அணியிலும் கெவின் அண்டர்சன், ஜோன் இஸ்னர் போன்றவர்கள் உலக அணியிலும் இடம்பெற்றிருந்தார்கள்.

கடந்த வருடம் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது லேவர் தொடரிலும் ஐரோப்பிய அணியே வெற்றி பெற்றிருந்தது. அடுத்த வருட லேவர் கிண்ணப் போட்டிகள் ஜெனீவாவில் செப்ரெம்பர் 20-22 வரை நடைபெறுபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# பதவி விலகல்



மேற்கிந்தியத்தீவுகள் அணி தற்போது இந்தியாவில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டுள்ள நிலையில் இதனைத் தொடர்ந்து பங்களா தேஷில் அவ்வணியுடன் மூவகைப் போட்டிகளிலும் விளையாடவுள்ளது. இந்தத் தொடருடன் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் தலைமைப் பயிற்சியாளரான ஸ்ரூவர்ட் லோ பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இங்கிலாந்து பிராந்தியக் கழகமான மிடில்செக்ஸ் கழகம் 4 வருட ஒப்பந்த அடிப்படையில் அவரைத் தலைமைப் பயிற்சியாளராக நியமித்தமையே இதற்குக் காரணமாகும். எதிர்வரும் ஜனவரி மாதம் அப்பதவியை அவர் ஏற்கவுள்ளார்.

அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த 49 வயதான ஸ்ரூவர்ட் லோ ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவராயினும் அவரது குடும்பம் தற்போது இங்கிலாந்திலேயே வசித்து வருகின்றது. எனவே குடும்ப நலனைக் கருத்திற்கொண்டே இந்த முடிவை அவர் எடுத்துள்ளார்.

2017 ஜனவரி மேற்கிந்தியத் தீவுகளின் தலைமைப் பயிற்சியாளர் பொறுப்பை ஏற்ற ஸ்ரூவர்ட் லோவின் பயிற்சியின் கீழ் அவ்வணி அந்நிய மண்ணில் சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கெதிரான டெஸ்ட் தொடர்களை வென்றதோடு 17 வருடங்களின் பின்னர் இங்கிலாந்தை லீட்ஸ் மைதானத்தில் வென்றதும் தான் அதி உயர் வெளிப்பாடாக இருந்தது. அடுத்தவருட உலகக் கிண்ணப் போட்டிகளைக் கருத்திற்கொண்டே கிரிக்கெட் மேற்கிந்தியத் தீவுகள் ஸ்ரூவர்ட் லோவை தலைமைப் பயிற்சியாளராக நியமித்தாலும் அணியின் பெறுபேறுகளில் சொல்லிக் கொள்ளும் படியான தாக்கத்தை அவரால் ஏற்படுத்த முடியவில்லை. எனவே அதனை ஈடுசெய்யும் வகையில் புதிய பயிற்சியாளர் நியமனம் அவசியமாயினும் குறுகிய காலத்தினுள் வரும் உலகக் கிண்ணம் அவருக்கு சத்தியசோதனையாகவே அமையும் எனலாம்.

# மீண்டும் ஜேர்மனி




2024 யூரோ கிண்ணப் போட்டிகளை நடத்தும் உரிமையை ஜேர்மனி பெற்றுள்ளது. கடந்தவாரம் சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் துருக்கியைத் தோற்கடித்தே ஜேர்மனி வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் ஜேர்மனிக்கு யூரோ கிண்ணப் போட்டிகளை இரண்டாவது தடவையாகத் தனித்து நடத்தும் பெருமை கிடைத்துள்ளது. முன்னதாக 1988ஆம் ஆண்டு நடைபெற்ற யூரோ கிண்ணப் போட்டிகள் மேற்கு ஜேர்மனியில் நடைபெற்றிருந்தது. வாக்கெடுப்பில் துருக்கி தோற்பது இது முதன்முறையல்ல. கடந்த 2008, 2012, 2016 யூரோ கிண்ணப் போட்டிகளை நடத்துவதற்கான வாக்கெடுப்பிலும் அது தொடர்ச்சியாகத் தோல்வியையே சந்தித்துள்ளது.

சர்வதேச உதைபந்தாட்ட உலகில் இவ்வாறான வாக்கெடுப்புக்களின் போது முறைகேடுகள் நிகழ்ந்து அதன் நம்பகத்தன்மை கேள்விக்குள்ளாகி வரும்நிலையில் இந்த வாக்கெடுப்பு குறித்து ஐரோப்பிய உதைபந்தாட்ட சங்கங்களின் சம்மேளனத் தலைவரான அலெக்சாண்டர் செபரின் 'இந்தச் செயல்முறை வெளிப்படையானது. வாக்கெடுப்பு ஜனநாயகமானது. ஒவ்வொரு ஜனநாயக முடிவும் சரியான முடிவென' தெரிவித்துள்ளார். அந்தவகையில் ஜேர்மனி, தொடரின் 51 போட்டிகளையும் நடத்துவதற்கு 10 மைதானங்களைத் தெரிவு செய்துள்ளதோடு இறுதிப்போட்டியை பேர்லின் அல்லது முனிச்சில் நடத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 06.10.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.